விலை ரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 வைகாசி 11 ஷ்பா 1 இதழ் 101

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 25—5—82

பிரிட்டிஷ் போர்க்கப்பல்கள்மீது

## ஆர்ஜென்டீனு விமானங்கள் கடும் எதிர்த்தாக்குதல்!

லண்டன், மே. 25 போக்லண்டில் நிலைகொண்டுள்ள பிரிட்டிஷ் துருப்புகளுக்கு உதவியளித்த பிரிட்டிஷ் போர்க்கப்பல்கள் மீது ஆர்ஜென்டீனு விமானங்கள் புதிய தாக்குதல் நடத்திய போது பிரிட்டிஷ் போர்க்கப்பல்ஒன்று தீப்பிடித்துக்கொண்டதுடன் ஆர்ஜென்டினுவிமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டன.


எரிந்துகொண்டிருக்கும் பிரிட்டிஷ் போர்க்கப்பல் இன்னும் கடலில் மிதந்துகொண்டிருப்பதாகவும், மாலுமிகள் தீயை அணைப்பதில் மும்முரமாக ஈடுபட்டுக்கொண்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதலின்போது ஒரு பிரிட்டிஷ்படை வீரர் கொல்லப்பட்டதாகவும், 5 பேர் படுகாயமடைந்ததாகவும் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் ஏழு ஆர்ஜென்டீனு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும் 3 விமானங்கள் - சேதமடைந்துள்ளதாகவும் பிரிட்டன் அறிவித்துள்ளது.

ஆர்ஜென்டீனுவின் ஆறு ராட்சத விமானங்களும் ஒரு விமானமும் சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும், ஒரு ராட்சத விமானம் இரு 'ஹைக்கோ' விமானங்களும் சேதமடைந்துள்ளதாகவும், பிரிட்டன் மேலும் அறிவித்துள்ளது.

## யாழ். பல்கலைக்கழக மாணவர் உண்ணுவிரதம்!



### யாழ்.பல்தொழில் நுட்பக் கல்லூரியும் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவன் அப்புலிங்கம் விமலராசாவை விடுதலை செய்யவேண்டும் அல்லது நீதிமன்ற விசாரணைக்குட்படுத்த வேண்டும் அல்லதுபடிப்பதற்கு வசதி செய்ய வேண்டும் என்ற மூன்று கோரிக்கைகளை முன்வைத்து நேற்றுக் காலை யாழ். பல்கலைக்கழக 18 மாணவிகளும் 32மாணவர்களும் மூன்றுநாள் உண்ணுவிரதத்தை ஆரம்பித்தனர்.

நாளை புதன்கிழமை இரவு வரை இவர்கள் தொடர்ந்து உண்ணுவிரதம் இருப்பார்கள் யாழ். பல்கலைக்கழக மாணவர் அவைத்தலைவர் திரு.கே.என். இராசநாயகம் தலைமையில் உண்ணுவிரதம் நடைபெறுகிறது.

#### பல்கலைக்கழக வளவில்

யாழ் பல்கலைக்கழக வளவுக்குள் கூடாரமடித்து மாணவிகள் ஒருபுறமும், மாணவர்கள் ஒருபுறமுமாக உண்ணு விரதம் இருக்கிறுர்கள் இவர்களுக்கு ஆதரவாக மேலும் 12 பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றுப்பகல் உண்ணுவிரதத்தில் ஈடுபட்டனர். இவர்களுடன் மொத்தம் அறுபத்து இரண்டு மாணவ மாணவிகள் உண்ணுவிரதமிருந்து வருகின்றனர்.

யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் உண்ணுவிரதப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து யாழ். பல்தொழில் நுட்பக் கல்லூரியைச் சேர்ந்த 1600 மாணவர்கள் நாளை புதன்கிழமை ஒருநாள் உண்ணுவிரதம் இருப்பார்கள்.

#### ஆதரவு தெரிவித்தனர்

நேற்றுக்காலை அகில இலங்கை விவசாயிகள் சம்மேளன மத்திய ஸ்தாபன அங்கத்தவர் வண.பிதா சேவக யோகானந்த தேவானந்த ஸ்தாபக அங்கத்தவர் பட்ரிக் பெர்ணுண்டோ, கிராமிய உழைப்பாளர் சங்க இணைப்புக்காரியதரிசி கௌரி காந்தன் ஆகியோர் உண்ணுவிரதமிருக்கும் மாணவர்களுக்கு நேரில் ஆறுதல் கூறி நீதியான இப்போராட்டத்துக்கு தங்கள் ஆதரவு என்றும் உண்டு என்றும் உறுதியளித்தனர் மாணவர்களின் போராட்ட நிதியாக 200 ரூபாவை அவர்கள் அன்பளிப்புச் செய்தனர், உண்ணுவிரதப் போராட்டம் நடாத்திக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கு உற்சாக மூட்டும் முகமாக பல்கலைக்கழக மாணவர்களும் எழுமி நின்று ஆதரவளித்துக் கொண்டுநின்றனர்.

### அமிர் - 'வித்தி' இன்று சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மாணவன் விமலராசாவை விடுதலை செய்பக்கோரி, யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் நடத்தும் போராட்டம் சம்பந்தமாக எதிர்க்கட்சி முதல்வர் திரு.அ. அமிர்தலிங்கம், யாழ்.பல்கலைக்கழக உபவேந்தர் சு. வித்தியானந்தனை இன்று காலை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதாக அறியப்படுகிறது [மா]

### வளைகுடா யுத்தம்: 30,000 ஈராக் துருப்புகள் சரண்

தெஃரான் மே 25 இரண்டு நாட்களாக நடைபெற்ற கடும் போரின் பின் ஈராக் 20 மாதத்தின் முன் கைப்பற்றிய தலைநகரான கொரரான் சேக்கை ஈரான் படைகள் மீட்டுள்ளன

ஈராக் தளபதி கொல்லப்பட்டதைத்தொடர்ந்து சுமார் 30,000 ஈராக் வீரர்கள் சரணடைந்துள்ளனர் என்று ஈரான் அறிவித்துள்ளது.

சக்திவாய்ந்த ஈராக் விமானங்களிலிருந்து தப்பித்துக்கொள்ள ஈரான் படைகள் இரவு நேரத்தில் தலைநகரை நோக்கி முன்னேறின. ஈராக் படைவீரர் பலர் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்துள்ளனர். (க)

### ஐ. ஜி. பி. ருத்ரா இந்தியா விஜயம்

(கொழும்பு)

பொலிஸ் மா அதிபர் திரு. ருத்ரா ராஜசிங்கம் ஓரிரு தினங்களில் புதுடில்லி பயணமாவார்.

புதுடில்லியில் அவர் தங்கியிருக்கும்போது, இலங்கை - இந்திய நாடுகளுக்குமிடையிலான குற்றத்தடுப்பு ஒத்துழைப்பு பற்றி ஆராய்வதுடன்; இலங்கை வடபகுதி பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோர் குறித்தும் விரிவாகப் பரிசீலனைசெய்வார்.

### மாணவியை கேலிசெய்த இளைஞர்களை பொலிஸார் கைதுசெய்தனர்

#### யாழ். பஸ்நிலையத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மாணவியொருவருடன் பஸ்ஸிலும், பஸ் நிலையத்திலும் தினமும்'சேஷ்டை'விட்டுவந்த இளைஞர் கோஷ்டியொன்றை யாழ். பஸ் நிலையத்தில்வைத்து பொலிஸார் நேற்றுக் கைது செய்தனர்.

இளைஞர்களின் தொல்லை தாங்கமுடியாத அம்மாணவி தனது தந்தையிடம் அறிவித்ததாகவும், தந்தை பொலிஸில் புகார் செய்ததைத் தொடர்ந்து இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுப் பிற்பகல் தந்தை பொலிஸில் புகார் செய்தபின்னர், பஸ் நிலையத்தில் காத்து நின்றபோது வழக்கம்போல், அந்த இளைஞர் கோஷ்டி அம் மாணவியிடம, சேஷ்டை விட்டதாகவும், இதனை அவதானித்த தந்தை பொலிஸாருக்கு தொலைபேசிமூலம் தகவல் கொடுக்க, பொலிஸார் 'ஜீப்'பில் வந்து இளைஞர்களை பஸ் நிலையத்தில் வைத்துக் கைதுசெய்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (மண்.நி.)

### கோவிலில் திருடியபோது பொலிஸாரிடம் சிக்கினர்!

(மாவிட்டபுரம்)

பல இடங்களில் கைவரிசை காட்டிய இரு திருட்டுப்பேர்வழிகள் முருகன் ஆலயத்திலும் தமது கைவரிசையைக் காட்டியபோது பொலிசாரிடம் மாட்டிக்கொண்டனர். பல திருட்டுக்களுக்குக் காரணகர்த்தாக்கள் எனச் சந்தேகிக்கப்படும் இருவரும் இம்மாதம் 31ம் திகதி வரை றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

மாதகல் நுணசை முருகமூர்த்தி கோவில் வருடாந்த உற்சவம் அண்மையில் நடை

[8-ம் பக்கம் பார்க்க]

### இராணுவ ஜீப் சாரதி பலி: விபத்து மரணம் என்று தீர்ப்பு

(யாழ்ப்பாணம்]

விபத்தில் உயிரிழந்த இராணுவ ஜீப்சாரதி வீரசம (24 வயது) வின் மரண விசாரணையை மேற்கொண்ட பதில் நீதவான் எஸ். அமிர்தலிங்கம் விபத்து மரணம் என்று தீர்ப்பளித்துள்ளார்.

மாங்குளத்திலிருந்து ஆனையிறவு இராணுவ முகாமுக்குத் திரும்பிக் கொண்டிருந்த ஜீப் மரமொன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஜீப் சாரதி உட்பட 6 இராணுவ வீரர்கள் படுகாயங்களுக்குள்ளானது தெரிந்ததே. ஜீப் சாரதி மரணமானுர். மரண விசாரணை நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் நடைபெற்றது.

கிளிநொச்சிப் பொலிசார் சாட்சிகளை ஆஜர் செய்தனர். சாரதியின் சடலம் அவரது சொந்த ஊரான கம்பஹாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது (ம)

### காக்கைதீவில் விளையாட்டு மைதானம்: கைவிடுமாறு யோசனை

[யாழ்ப்பாணம்]

யாழ் பல்கலைக்கழக தொல்பொருள் ஆராய்ச்சிப் பகுதியினர் காக்கைதீவில் தொல்பொருள் ஆராய்ச்சி நடாத்தி வருவதால், காக்கைதீவைப் பொது விளையாட்டு மைதானமாக்க அரசாங்கம் எடுக்கும் முயற்சியைக் கைவிடுமாறு கோரும் பிரேரணை நாளை நடைபெறவிருக்கும் யாழ். மாவட்ட அபிவிருத்திசபைக் கூட்டத்தில் தாக்கல் செய்யப்படும்.

யாழ். செயலக புதிய சபா மண்டபத்தில் அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. சு. நடராசா தலைமையில் இக்கூட்டம் நடைபெறவிருக்கிறது.

திரு. க. சின்னத்துரை இத்தீர்மானத்தைக் கொண்டுவர இருக்கிறுர். தீர்மானத்தின் விபரம் வருமாறு:-

''யாழ்.பல்கலைக்கழகதொல்பொருள் ஆராய்ச்சிப் பகுதியினர் தொல்பொருள் ஆராய்ச்சியைத் தற்போது காக்கைதீவில் செய்துவருகின்றுர்கள் அவ்விடத்தை ஒருபொது விளையாட்டு மைதானமாக மாற்றுவதற்கு அரசாங்க மேலிடம் முயன்று வருவது அப்பகுதியில் புராதன ஆராய்ச்சிகளுக்குத் தடை ஏற்படுமாகையால் காக்கைதீவுத் திடலை பொதுவிளையாட்டு மைதானமாக்க எடுக்கும் முயற்சியை கைவிடுமாறும் அதற்கு அருகில் இருக்கும் வெற்று நிலத்தை எடுத்து பொது விளையாட்டு மைதானமாக்கும்படியும் அரசாங்கத்தை கேட்டுக்கொள்கின்றது'' (மா)

# வரி விளம்பரம்

## தேவை

யாழ். நகரில் பிரபல கல்வி நிறுவனம் ஒன்றிற்கு காசாளர்கள் தேவை 31-5-1982 இற்கு முன் விண்ணப்பிக்கவும். (இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்) விளம்பர இல:3305 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம்.

3305

ஸ்ருடியோவில் சகல வேலையும் தெரிந்த ஆள் உடனடியாகத் தேவை. தகுந்த சம்பளம் தரப்படும். ஜெயா ஆட்ற் போட்டோ, சாவகச்சேரி. 3303

நல்ல நிலையிலுள்ள—முன்கரியர் பெரிதாகவுள்ள டிலிவரி சைக்கிள்(வான்பைக்) தேவை. தொடர்பு:— பாலா பிறதர்ஸ், வங்களாவடி, வேலணை.

3294

## விற்பனைக்கு

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் வீடு கட்டுவதற்கு உகந்த 2½பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. சந்தை, பஸ் நிலையம், புகையிரத நிலையம் ஆகியவற்றிற்கு மிக அண்மையில் உள்ளது. விபரங்கட்கு: Dr. N. இராமச்சந்திரன் C/o A.சோதிலிங்கம், நுணுவில் மேற்கு, சாவகச்சேரி. 3500

புனரமைக்கப்பெற்ற HONDA C 90 செல்வ்ஸ்ராட்டர் மொடல் மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்குண்டு. நா. சாம்பசிவம் அன் கோ, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். போன்: 454.
3266

## நடப்புவருட நிர்வாகிகள்

(அச்சுவேலி)

வலி—கிழக்கு வட பகுதி அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறச் சங்கக் கிளை புத்தூர் மேற்கு 13 ம் இலக்கக்கிளைக் கூட்டத்தில் கிளையின் நடப்பு ஆண்டு நிர்வாகிகளாகப் பின்வருவோர்ஏகமனதாகத்தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்;— திரு. பரமநாதன் குகதாசன், உப—தலைவர் திரு. காசிநாதர் சிவசுப்பிரமணியம், செயலாளர்: திரு. விசுவநாதர் தணிகாசலம்,

உறுப்பினர்கள்: திருமதி செல்வநாயகி ஜெயராம், திருவாளர்கள் சங்கரப்பிள்ளை நவரட்ணவேல், வைத்திலிங்கம் தியாகராசா, இளையதம்பி, சின்னப்பர், கந்தசாமி, மாணிக்கவாசகர் விசுவநாதன், மார்க்கண்டு உதயகுமார்.

ஃ ஃ ஃ

[யாழ்ப்பாணம்]

கோண்டாவில் விபுலானந்த படிப்பக சனசமூகநிலையத்தின் நடப்புவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவாகினர்.

தலைவர்: வே.ச. சின்னையா, உபதலைவர்: வே. தியாகராசா, செயலாளர்: க. சிவபாலசிங்கம், உபசெயலாளர்; இ. தவபாலன், பொருளாளர்: சு. சுந்தரம், உபபொருளாளர்: சி. தயானந்தன், பரிசோதகர்; வே. சின்னராசா.

பத்து பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

## பின்னுறுதிக் கட்டளைபற்றிய அறிவித்தல்

(இல.84அ— பிரிவுகள் 524, 532)

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற ஊரிக்காடு வல்வெட்டித்துறை வேலுப்பிள்ளை அழகேந்திரன் என்பவரின் மரணசாதனத்தின்/மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவர் அழகேந்திரன்கைம்பெண் இரத்தினதேவி, திக்கொளு ஒழுங்கை, ஊரிக்காடு, வல்வெட்டித்துறை.

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் இல.1143 T

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982—ஆம் ஆண்டு ஆனி மாதம் 25—ஆந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால்தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக்கட்டளைப்படி
**ம. சிதம்பரநாதன்**
பதிவாளருக்காக

தயாரித்தவர்:
**எஸ். நாகலிங்கமுதலி**
மனுதாரின் சட்டத்தரணி.

1982—ஆம் ஆண்டு வைகாசி மாதம் 05 ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

3278

### உயிர்ப்பலி தொடர்பான மனு:

# பொலிஸ் மா அதிபருக்கு பதிவுத்தபால் மூலம் அறிவித்தல்

[மாவிட்டபுரம்]

ஆலய உயிர்ப்பலி தொடர்பான மனுவில் இரு எதிர்மனுதாரர்கள் சார்பில் மறுமொழி அணைக்கப்பட்டதையடுத்து மற்றைய எதிர்மனுதாரரான பொலிஸ் மா அதிபருக்கு பதிவுத் தபால் மூலம் அறிவித்தல் அனுப்ப உத்தரவிட்ட நீதிபதி விசாரணையை ஜூன் 2ம்திகதிக்கு ஒத்திவைத்தார்.

கீரிமலை கவுணுவத்தை வைரவர் ஆலயத்தில் உயிர்ப்பலியிடுவதை பொலிசார் தடைசெய்யக்கூடாதெென கோரும் மனு, மல்லாகம் நீதிமன்றத்தில் ஆலய முகாமையாளர் ஆறுமுகம் வைத்தீஸ்வரன் என்பவரால் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

ஏற்கனவே பலமுறை இம்மனு மல்லாகம் நீதிமன்றத்தில் விசாரணைக்கெடுக்கப்பட்டபோதும் எதிர் மனுதாரர்கள் மறுமொழி அணைக்காததினுலும், எதிர் மனுதாரர்களில் ஒருவரான பொலிஸ் மா அதிபருக்கு கட்டளை வழங்கப்படாமையினுலும் விசாரணை தாமதமடைந்தது.

இம்மனு, மீண்டும் மல்லாகம் நீதிமன்றத்தில் எடுக்கப்பட்டபோது எதிர்மனுதாரர்களான காங்கேசன்துறை முன்னுள் பொலிஸ் பொறுப்பதிகாரி மேவின் பெர்ணண்டோ, தற்போதைய பொறுப்பதிகாரி திரு. எதிரிவிக்கிரம ஆகியோர் சார்பில் சட்டத்தரணி அ. குமரகுரு மறுமொழிகளை அணைத்தார்.

மேற்படி ஆலயத்தில்உயிர்ப்பலியிடும் தினம் விரைவில் வர இருப்பதால் அதற்கிடையில் மனுவின் விசாரணையை முடித்துவிட வேண்டும் என்று மனுதார் தரப்பு சட்டத்தரணிகள் கோரினர். இதனையடுத்து கிட்டிய தவணையாக ஜூன் 2ம் திகதிக்கு விசாரணையை ஒத்திவைத்த நீதிபதி திரு. சீ. வி. விக்னேஸ்வரன் பொலிஸ் மா அதிபருக்கு பதிவுத்தபால் மூலம் அறிவித்தல் அனுப்புமாறும் உத்தரவிட்டார்.

மனுதார் சார்பில் சட்டத்தரணிகள் திருமதி மோகாந்தி பீரிஸ், திரு. வி. எஸ். கணேசலிங்கம் ஆகியோருடன் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானுர், எதிர்மனுதார் சார்பில் சட்டத்தரணி அ. குமரகுரு ஆஜரானுர்.

## கேள்விப்பத்திரம்

தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தில் ஏழாயிரத்துக்கு மேற்பட்ட வெற்றுசசாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்குண்டு. ரூபா 250/— வைப்புப்பணமாகத் தலைமைக்காரியாலயத்தில் செலுத்தி கேள்விப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரம் 28-05-82ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் பொதுமுகாமையாளர், தெல்லிப்பளை ப.நோ. கூ. சங்கம், தெல்லிப்பளை என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல்வேண்டும். தபால் உறையின் இடதுபக்கத்தில் 'வெற்றுச்சாக்கு கேள்விப்பத்திரம்' எனக் குறிப்பிடப்படல்வேண்டும். கேள்விப்பத்திரங்கள் யாவும் 28-5-82ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4-00 மணிக்குச் சங்க உபசபையினர் முன்னிலையில் திறக்கப்படும்.

**பொதுமுகாமையாளர்**
தெல்லிப்பளை
ப. நோ. கூ. சங்கம்.
தெல்லிப்பளை.

82-05-24. 3307

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

மரணசாதனம் எதையும் நிறைவேற்றுது இறந்த யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை இல. 23, கடையிற்சாமி ஒழுங்கையில் வசித்த செல்லையா சுப்பிரமணியம் என்பவரின் சொத்துக்களுக்குநிர்வாகத்தத்துவப் பத்திரம் பெறுவதற்கான விண்ணப்பம் சம்பந்தமாக.

[மரணமெய்தியவர்]

மரணச்சொத்து)
நியாயாதிக்கம் ) இல.3656/T

யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணை 23, கடையிற் சாமி ஒழுங்கை, செ. சுப்பிரமணியம் கைம்பெண் பொற்கொடி.

மனுதார்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணச்சொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்துக்களுக்கு நிர்வாகத் தத்துவப் பத்திரம் பெறுவதற்காகத் தொடரப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982ம்ஆண்டு வைகாசி மாதம் 28ம் திகதியன்று முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்ற ஆணைப்படி,
**தா. குலஞானம்,**
பதிவாளர்.

1982ம் ஆண்டு பங்குனி மாதம் 01ம் திகதி.

வரைந்தவர்:
C. சோமசேகரம்,
மனுதாரின்
சட்டத்தரணி

3252

## கொள்ளை சந்தேகத்தில் ஒருவர் கைது

(மாவிட்ட புரம்)

புன்னலைக்கட்டுவன் ஈவினை கொள்ளைச் சம்பவம் தொடர்பாக ஒருவர் கைதாகி அடையாள அணிவகுப்புக்காக றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

புன்னலைக்கட்டுவன் ஈவினையில் எஸ். இராஜரத்தினம் என்பவரது வீட்டில் இடம்பெற்ற 50 ஆயிரம் ரூபா நகைக்கொள்ளை தொடர்பாக புன்னலைக்கட்டுவனைச் சேர்ந்த மாணிக்கவாசகர் குபேந்திரராஜா என்பவரைச் சுன்னுகம் பொலிசார் சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர்.

மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டஇந்நபரை றிமாண்டில் வைத்து அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறு நீதிபதி திரு. சீ. வி. விக்னேஸ்வரன் உத்தரவிட்டார்.

கிழக்கிலங்கை

## உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பில் நடைபெற்ற கிழக்கிலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்க அங்குரார்ப்பண கூட்டத்தில் காலஞ்சென்ற செய்தி மன்னன் செல்லத்துரை, மட்டக்களப்பு தினகரன் லோரன்ஸ் ஆகிய இருவரின் மரணத்திற்கு இரு நிமிட மௌன அஞ்சலிசெலுத்தப்பட்டது.

இதுதொடர்பான அனுதாப செய்தியை இவர்களின் குடுத்பத்தினருக்கு அனுப்பி வைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

### நிர்வாகிகள் தெரிவு

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி மண்டபத்தில் கிழக்கிலங்கை செய்தியாளர்கள் கலந்து கொண்ட உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் அங்குரார்ப்பண கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்; திரு. பி. யோசப், உபதலைவர்கள்: திரு. கே. இரத்தினலிங்கம், திரு. சிவப்பிரகாசம், ஜனுப் எம். சுபைர், காரியதரிசி: திரு. எஸ். நாகராசா, உபகாரியதரிசிகள்: திரு. இரா. துரைரட்னம், திரு. எஸ். குமரகுரு, பொருளாளர்: திரு. எஸ். அந்தோனிப்பிள்ளை. மற்றும் 7 பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.


'யமஹா' மோட்டார் சைக்கிள்
இலவச திருத்துதல் சேவை
'யமஹா' கொம்பனி வல்லுனர்கள் மேற்பார்வையில்
28-5-82-ம், 29 5-82 ம் இரு தினங்கள் மாத்திரம்
உதிரிப்பாகங்கள் விசேட கழிவு விலையில் விற்கப்படும்
இச்சேவையைப் பெறவிரும்பின் உடனே வந்து நேரத்தைப் பதிவுசெய்யவும்
வடமாகாண ஏகவிநியோஸ்கதர்கள்
சிலோன் மேர்ச்சன்ஸ் லிமிற்ரெட்
484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.




சிறந்த தமிழ் சினிமாப் படங்களை சென்னை தொலைக்காட்சியில் பார்க்க வேண்டுமா?
இதோ! ஒவ்வொரு கிழமையும் சிறந்த தமிழ்ப்படங்களை சென்னைத் தொலைக்காட்சியில் பார்த்து மகிழ்வதற்கு உத்தரவாதத்துடன் தொலைக்காட்சி ஏரியல் பொருத்திக்கொள்ள ஓடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.
வீனஸ் றெக்கோடிங் றேடியோ வாச் வேக்ஸ்
266/1, ஸ்ரான்லி வீதி, (ஸ்ரீதர் தியேட்டர் அருகாமையில்) யாழ்ப்பாணம்.

## ★ போக்லண்ட் சண்டை தீவிரமடைகிறது!

# பிரிட்டிஷ் விசேட அதிரடிப்படையினரும் யுத்தத்தில் இறங்கினர்!

### ஆர்ஜென்டீனாவும் எதிர்த்தாக்குதல்

லண்டன், மே. 24,

போக்லண்ட் தீவுகளில் இறங்கியுள்ள பிரிட்டிஷ் துருப்புக்கள் வெகு சாதுரியமாக போராடி வருகின்றன என்று பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கிரேட் தட்சர் தமது டவுனிங் வீதி இல்லத்தில் வைத்து பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்.

பிரிட்டிஷ்பாதுகாப்புஅமைச்சர் திரு. கோன்நொட் போர் விபரங்கள் பற்றிய தகவல்களை வெளியிடுகையில் பிரிட்டனின தேசியக் கொடியான 'யூனியன் ஜக்' மீண்டும போக்லண்ட் தீவுகளில் பறக்கவிடப்பட்டுள்ளதெனத் தெரிவித்திருப்பதுடன் ஆர்ஜன்டீனா விமானப்படையின் பிரெஞ்சுத் தயாரிப்பு 'மிராஜ்' விமானங்களில் ஐந்தில் ஒரு பங்கை பிரிட்டிஷ் துருப்புக்கள் நாசம் செய்துள்ளதாகவும் அறிவித்தார்.

இத்தகவல்களை உறுதிப்படுத்தும் வகையில் பிரிட்டிஷ்சுடற்படைவீரர்கள் சிலர் தமது தேசியக்கொடியினை போக்லண்ட்டில் ஏற்றிவைக்கும போது பிடிக்கப்பட்ட படங்களும் பிரிட்டனில் தொலைக்காட்சிச் சேவையில் காண்பிக்கப்பட்டன.

பிரிட்டன் தரப்பில் ஏற்படுத்தப்பட்ட நஷ்டங்கள் பற்றி ஆர்ஜண்டீனா வெளியிட்ட தகவல்களில் ஐந்து போர்க்கப்பல்கள் தாக்கப்பட்டுள்ளனவென்றும், இவற்றில் இரண்டு மோசமாகச் சேதமடைந்துள்ளன என்றும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தத்தில் இறங்கியுள்ள பிரிட்டிஷ்படைகளுடன் 'எஸ். எ. எஸ்.' என்ற பிரிட்டனின் விசேட கொமாண்டோ அதிரடிப்படையினரும் சேர்ந்துள்ளனர். இக் கொமாண்டோ அணியினரைக் இராட்சத ஹெலிகாப்டர்கள் கயிற்று ஏணி மூலம் போக்லண்ட் தீவுகளில் இறக்கின.

''எஸ். எ. எஸ்' அதிரடிப் படை சர்வதேசரீதியில் மீட்பு நடவடிக்கைகள் பலவற்றைப் புரிந்து பெயர்பெற்ற தொன்றென்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே போக்லண்ட் தீவுகளில் இருதரப்பினரும் கடுமையாகமோதத்தொடங்கியுள்ளனஎன்றும் ஆர்ஜண்டீனா எதிர்த்தாக்குதலில்இறங்கியுள்ளது என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. (கி)

## பொங்கல் விழா

[யாழ்ப்பாணம்]

நெல்லியான் ஞானவைரவர் ஆலய வைகாசிப் பொங்கல்விழா இன்று மாலை இடம் பெறவுள்ளது.

## ''தேசாபிமானத்துக்கு மேலாக மனிதாபிமான ரீதியில் நெருக்கடிக்குத்தீர்வுகாண்க''

### பாப்பரசர் ஆர்ஜென்-பிரிட்டனுக்குவேண்டுகோள்

வத்திக்கான், மே 24

போக்லண்ட் தீவுகள் நெருக்கடியைத் தேசாபிமானம் என்ற மனப்பான்மைக்கு மேலாகச் சென்று மனிதாபிமான ரீதியில் அமைதியுடன் தீர்க்க பிரிட்டனும், ஆர்ஜென்டீனாவும் முன்வரவேண்டும் என்று புனித பாப்பரசர் ஜோன் போல் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

போக்லண்ட் நெருக்கடிக்கு அமைதியான தீர்வு காண்பதற்கு இன்னும் காலம் கடந்து விடவில்லை. எனவே இவ்விவகாரத்தில் உடனடித் தீர்வு காண்பது இரு நாடுகளினதும் கடமையாகும் என்றும் தெரிவித்த பாப்பரசர், ''ஆயுதங்களினால் மட்டும் பிரச்னைகளைத் தீர்க்கமுடியாது. இந்த நெருக்கடிக்குத் அமைதியான முறையில் தீர்வு காண்பதற்கான வாய்ப்புகள் இன்னும் அருகிவிடவில்லை. எனவே இரு நாடுகளும் உடனடியாக அமைதி முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் கூறினர்.

போக்லண்ட் தீவுகளில் பிரிட்டிஷ் – ஆர்ஜென்டீனா படைகள் கடும் சண்டையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும்இவ் வேளையிலேயே புனித பாப்பரசர் மேற்கண்ட கருத்தைக் கூறியுள்ளார்.

### வெள்ளிக்கிழமை பிரிட்டன் விஜயம் ரத்தாகலாம்

இதேசமயம் பாப்பரசர் அடுத்த வெள்ளிக்கிழமை பிரிட்டனுக்கு மேற்கொள்ளப்படவிருக்கும் உத்தியோகபூர்வ விஜயம் ரத்துச்செய்யப்படலாமென்றும், இதுபற்றிய இறுதி முடிவு இன்னும் ஓரிரு தினங்களில் தெரியும் என்றும் பிரிட்டிஷ் செய்திகள் தெரிவிக்கின்றன, (இ)

# ''பூமியின் உயிர் வாழ்வை பாதுகாப்பது மதங்களது பெரும் கடமை!

### மதத்தலைவர்கள் மாநாட்டுக்கு செய்தி

பிரெஸ்ஸெல்ஸ், மே 24

'வெறிபிடித்த தேசியவாதிகளையும் இராணுவத்துறைத் தலைவர்களையும் தவிர ஏனையவர்கள் அனைவரும் நாடுகளுக்கிடையிலான வேறுபாடுகளைத் தீர்ப்பதற்கு அச்சுறுத்தல் கொள்கையையும் ஆயுதங்களைப் பயன்படுத்தும் கொள்கையையும் அறவே நிராகரிக்கிறார்கள்' என்று மாஸ்கோவில் நடைபெறும் 'அணுவாயுத அழிவிலிருந்து மனித குலத்தைக் காப்பாற்றுவதற்கான மத ஊழியர்களது மகாநாட்'டின் பிரதிநிதிகளுக்கு பெல்ஜியத் திருச்சபைத் தலைவர் அனுப்பியுள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

'பூமியில் சமாதானத்தையும் தேசங்களது பந்தோபஸ்தையும் எவ்வாறு பாதுகாப்பது என்பது குறித்து மக்கள் வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருக்கிறார்கள். இராணுவத்தைக் கட்டியெழுப்புவதன்மூலம் சமாதானத்தைப் பாதுகாக்கமுடியும். என்று சிலர் நினைக்கிறார்கள். இது தவறு, இது ஆயுதப்போட்டிக்கே வழிகோலும். இன்று மதத் தலைவர்கள் பூமியின் உயிர் வாழ்வைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் குறித்துப் பேரக்கறை காட்டுகிறார்கள். இப்புனிதக் கடமை ஒவ்வொரு மதத்தினரதும் பொறுப்பாகும்' என்றும் பெல்ஜியத் திருச்சபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

மதத் தலைவர்களது மகாநாடு ஒன்று ஏற்கனவே 1977 ல் மாஸ்கோவில் நடைபெற்றுள்ளது. இந்த இரண்டாவது மகாநாட்டில் பௌத, இந்து சீக்கிய, யூத, இஸ்லாமிய, கிறிஸ்தவ சமயங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி 110 நாடுகளிலிருந்து 400க்குமதிகமான பிரதிநிதிகள் கலந்துகொண்டுள்ளர் என்பது குறிப்பிடத்தக்கது.

### பாப்பரசர் செய்தி

மதத்தலைவர்களது மகாநாட்டினை ஒட்டி, மாஸ்கோவினதும் அனைத்து ரஷ்ய திருச்சபையினதும் தலைவருக்கு பரிசுத்த பாப்பரசர் அனுப்பி வைத்த செய்தி:

'அணுவாயுதப் பேரழிவிலிருந்து மனித வாழ்வைப்பாதுகாப்பதற்கான மதத் தலைவர்களது உலக மகாநாட்டிற்குப் பார்வையாளர்களாக, கிறிஸ்தவ ஐக்கியத்தை மேம்படுத்துவதற்கான நமது செயலவையின் பிரதிநிதிகள் இருவரை அனுப்புவதன் மூலம் கிறிஸ்தவ தர்மத்தை மெய்யாகப் பின்பற்றும் வகையில உங்கள் திருச்சபையுடன் சகலதுறைகளிலும் ஒத்துழைக்கும் எனது திட உறுதியை உங்களுக்கு மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். மனிதனது நல்லவார்த்தைகள் மனித வாழ்வில் நல்லெண்ணத்தையும், சகோதரத்துவத்தையும் ஏற்படுத்த வகைசெய்வதுடன், உலகம் முழு தினதும் சமாதானத்துக்கு உத்தரவாதமாகவும் அமைகின்றன'

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அனுப்பி வைத்த செய்தி வருமாறு:

''மனித வாழ்வை அணுவாயுத சீரழிவிலிருந்து பாதுகாப்பது குறித்து மதத்தலைவர்களது உலக மகாநாடு பெரும் பொறுப்புமிக்கதாகும்.

''அணுவாயுதப் பேரழிவு, பேரழிவு அபாயம் மனித குலத்தை எந்நேரமும் அச்சுறுத்திக்கொண்டிருக்கின்றது. பந்தோபஸ்து உத்தரவாதங்களையும் தான் விட்ட வெகுஜனப் பேரழிவு ஆயுதங்கள் மனித நாகரீகத்தை அச்சுறுத்தும் வகையில் பல மடங்காகப் பெருகி வருகின்றன. பொருளாதார வளர்ச்சிக்கு அவசியமான பெரும் வளங்களை இந்த அழிவுத்துறை விழுங்கி வருகிறது.

### கட்டுரைப் போட்டி

[சுழிபுரம்]

திருவாதவூரர் புராண நூல் வெளியீட்டைபொட்டி கட்டுரைப் போட்டியொன்றை நடாத்த நிலையக்குரல் வெளியீட்டுக்குழுவினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

## பாலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கு அணிசேரா நாடுகளின் ஆதரவு என்றுமே கிடைக்கும்

### யாஸிர் அரபாத் நம்பிக்கை

புதுடில்லி, மே. 24

''லெபனானிலுள்ள பலஸ்தீனியர்களின் அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதல்கள் கண்டிக்கப்பட வேண்டும். அணிசேராஇயக்க நாடுகளின் ஆதரவு என்றுமே எமது இயக்கத்துக்கு கிடைக்குமென்ற நம்பிக்கையுண்டு''

இவ்வாறு இந்தியாவில இரு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்துக் கொண்ட பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் ஜனாப் யசீர் அரபாத் நிருபர்கள் மத்தியில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

ஈரான் - ஈராக் பிரச்னை, மத்தியகிழக்கு பிரச்னை ஆகியன தொடர்பாகவும் தாம் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தியுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும் ஜனாப் அரபாத் தெரிவித்தார்.

இருவருடங்களுக்கு முன்னர் பாலஸ்தீனியர்களின சுயஆட்சிக் கோரிக்கைக்கு இந்தியா பூரண ஆதரவு வழங்கியிருந்தது தெரிந்ததே. [வெ]

### அமெரிக்காவில்

# ஒரு கோடி பேருக்கு வேலை இல்லை!

### 'டைம்' சஞ்சிகை தகவல்

வாஷிங்டன், மே 24

''அமெரிக்கப் பொருளாதாரத்தில், வேலையில்லாத் திண்டாட்டம் ஒரு பெரிய தலையிடியாக உள்ளது. மார்ச் மாதத்தில் இது 9 சதவீதமாக அதிகரித்துள்ளது. 2வது உலக யுத்தத்திற்குப் பின்னர் 1975ம் ஆண்டின் பொருளாதார நெருக்கடிகளின்போது வேலையில்லாத் திண்டாட்டம் இதேயளவு உயர்வை அடைந்திருந்தது. இன்று ஒரு கோடி பேர் இங்கு வேலையில்லாதுள்ளனர். அரைகுறை வேலையில் உள்ள 56 லட்சம் பேர் இந்தக் கணக்கில் சேர்க்கப்படவில்லை. சில தொழில்துறைகளில் 1929–1933ல் பொருளாதார நெருக்கடிகளின்போது காணப்பட்ட வேலையில்லாத் திண்டாட்ட அளவு இன்று காணப்படுகின்றது.''

இவ்வாறு அமெரிக்க 'டைம்' சஞ்சிகை செய்தி வெளியிட்டுள்ளது.

'பொருளாதார ஸ்தம்பிதமும், உயர் வங்கி வட்டி வீதமும் தான் இதற்குக் காரணமென்று பெரும்பாலான பொருளாதார நிபுணர்கள் கருதுகிறார்கள். இன்றைய பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு ராணுவச் செலவில் கணிசமான அளவுக் குறைப்பை ஏற்படுத்துவதே ஒரே வழி, என்றும் அவர்கள் கூறுகிறார்கள்'' என்றும் 'டைம்' சஞ்சிகை கூறுகிறது.

## கேரளத்தில் இந்திரா காங்கிரஸ் அரசு

சென்னை, மே. 24

கேரள மாநிலத்தில் இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. கே கருணாகரன் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி அமைச்சரவை இன்று பதவியேற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

மேற்கு வங்காளத்தில் திரு. ஜோதிபாசு தலைமையிலான அமைச்சரவை புதன்கிழமை பதவியேற்கும்

ஹரியானா மாநிலத்தில் திரு. பஜன்லால் தலைமையிலான அமைச்சரவை இன்று காலை பதவியேற்றது. (வெ)

### இந்து மகாசமுத்திர பிராந்தியத்தில்

## அமைதி குறித்து டில்லி மாநாடு கவலை!

புதுடில்லி, மே. 24

''இந்து மகாசமுத்திரத்தில் இராணுவத் தயாரிப்புகளில் அமெரிக்கா ஈடுபட்டுவருவது இப்பிராந்திய மக்களின் அமைதிக்கும், பந்தோபஸ்துக்கும் அச்சுறுத்தலாகும். கரையோர ராஜ்யங்களின் பிரதேச ஒருமைப்பாட்டுக்கும், இறைமைக்கும் சவாலாகும்.''

இவ்வாறு புதுடில்லியில் நடந்தேறிய இந்து மகாசமுத்திர அமைதி மண்டலச் சர்வதேச மாநாடு நிறைவேற்றிய தீர்மானம் கூறுகிறது. இம் மாநாட்டில் 50 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

''அமெரிக்காவின் ஜீவாதாரமான நலன்கள் மண்டலமாக இந்துமகாசமுத்திரத்தைஅமெரிக்கா பிரகடனஞ்செய்திருப்பதுடன் துரிதமாகத் தாக்கும் விசேஷ படைகளை நிறுத்தவும் திட்டமிட்டுள்ளது. மேற்கு இந்து மகாசமுத்திரத்தில் பரட்ரா, முகத்திஸு, பொம்பாஸா, நஸ்யுகி, ராஸ்-பெனுளீ மஸிரா தீவு ஆகியவற்றில் உள்ள அமெரிக்க இராணுவத் தளங்கள், எண்ணெய் உற்பத்திசெய்யும் அரபு-முஸ்லிம் நாடுகளுக்குச் சவாலாக உள்ளன. எகிப்து முதல் தென்னாபிரிக்கா வரை அரை வட்ட அமைப்பில் நீண்டு செல்லும் இராணுவத் தளங்கள் நிறவப்படுகின்றன. தென்னாபிரிக்காவின் ரொப்பன் தீவில் கடற்படைத் தளமொன்று நிர்மாணிக்கப்படுகிறது. இந்து மகா சமுத்திரத்தின் நடு மத்தியில் மொரீஷியஸுக்குச் சொந்தமான தியகோகார்ஷியாவில் கடற்படைத் தளம் உருவாகி

(6ம் பக்கம் பார்க்க)

## மணிவாக்கு

உலக மக்களின் செய்கைகள் நாசகாரச் செய்கைகளாக இருந்திருந்தால் உலகம் முன்னமே அழிந்திருக்கும் என்பதை நாம் உணரமுடியாதா? அன்பு அல்லது அஹிம்சையால்தான் இந்த உலகம் நிலைத்துநிற்கிறது.

—மகாத்மா காந்தி.

# நமது நோக்கு

## அபூர்வ சாதனை

யாழ்ப்பாண ஆஸ்பத்திரி வீதியில் மிகப்பெருஞ் செலவில் அமைக்கப்பட்ட கம்பீரமான மாடிக் கட்டிடத்தை ''தொடர்பகம்'' என்ற நிறுவனமாக சென்ற வெள்ளிக்கிழமை திறந்து வைத்த வைபவம் மிக அழகானது.

இத்தகைய அழகான கட்டிடத்தை திறம்பட அமைத்து அதன் நோக்கங்களை நிறைவேற்றவல்ல பன்முகப்பட்ட பணிகளை விருந்தினருக்கு விளக்கிய பாங்கு வேறு எவரால் செய்யமுடியும்? சேவைக்கு தமது திறமையை அர்ப்பணித்த யாழ் கத்தோலிக்க திருச்சபையால் இதுமுடிந்ததென்றல் அதில் வியப்பேது?

கத்தோலிக்க [Catholic] என்ற சொல்லின் அடிப்படைக் கருத்தை சரியாகப் புரிந்தவர்கள் அச்சமூகத்தினருக்கு வெளியே காண்பது அரிது. பரந்த உள்ளம் படைத்த என்பது அச் சொல்லின் கருத்து; அகராதி குறிக்கும் அடிப்படைக்கருத்து காலப் போக்கில் சமயப்பூசல்களும் சமுதாயப் பிணக்குகளும் ஏற்படுத்திய பிரிவினைக்கொள்கைகள் இந்த அருமந்த கருத்தை பொது மக்கள் மனத்திலிருந்து அகற்றிவிட்டது ஒரு துர்ப்பாக்கியம்.

இது கடந்தகால வரலாற்றின் விளைவே; எவ்வாருயினும் சர்வதேச ரீதியில் இம்மதத்தினர் ஆற்றிய, ஆற்றிவரும் சேவை 'மண்ணில்' நாம் நல்ல வண்ணம் வாழலாமென்ற சம்பந்த சுவாமிகளின் கூற்றுக்கு நிகரானது.

மனித வளர்ச்சிக்கு ஆன்மீக வாழ்வு அடிப்படையானதென்னும், மறை எம்மில் வளர்ந்தால், 'உன் மதம், என் மதம்' என்ற அரசியல், சமுதாய போட்டியும் ஏற்பட இடமில்லை என்பதும் அன்றைய வைபவத்தில் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது

அன்றைய உரைகளின் உயிர்த்துடிப்பு. அந்தக் கம்பீரமான நிறுவனத்தைக் கட்டியெழுப்பிய திறமையின் எதிரொலியெனக்கொள்ளலாம்.

பளிங்குபோலப் பிரகாசிக்கும் அப்பூரண நிறுவனம், சமூகத்தில் எழுகின்ற புதிய பிரச்சினைகளை, புதிய சவால்களைச் சந்திக்கும் பொறுப்பைப்பூர்த்திசெய்ய உதயமானதென்பது தெரிவிக்கப்பட்டது.

கத்தோலிக்க சமயத்தின் துறவுச் சேவை, யாழ்ப்பாணத்தின் வளர்ச்சிக்குப் பல்வேறு துறைகளில் பயன்பட்டிருப்பதை நாம் நினைவுகூர்ந்தால் இந்த மணிமண்டபம் அச்சமூகத்தினர் மத்தியில் நாம் காணும் பல திறப்பட்ட திறமைகளுக்கும், தம்மைச் சமூகத்துக்காக அர்ப்பணிக்கும் மனோபாவத்துக்கும் ஒரு எடுத்துக்காட்டாகும்.

நூலகம், ஆய்வுகூடம், கருத்தரங்கு மண்டபம், தொடர்புச் சாதனங்கள்—திரைப்படம், தொலைக்காட்சி போன்ற தொழில்நுட்பச் சாதனங்களின் துணைகொண்டு தொடர்பியலை முழுமைப்படுத்தும் கருவிகள்—இவை யாவும் அறிவையும், ஆராய்ச்சியையும் விருத்திசெய்யும் நோக்குக் கொண்டவை.

தலைமைத்துவம் இன்று ஒரு சர்ச்சைக்குரிய விடயமாய் விட்டது. பண்டைக் காலத்தில் அரசன், அறிவிற் சிறந்தோன் ஆண்மை வீரன் இட்டது சட்டமாகக் கொள்ளப்பட்டது

மக்கள் ஆட்சியில் மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் தலைவன் தேர்ந்தெடுக்கப்படுகிறுன். மக்கள் விசுவாசத்தை இழந்ததும், அத்தலைமை அவனை விட்டகலுகின்றது

தலைமைத்துவம் இன்று பிரச்சினைக்குரியதாவதற்கு பொது மக்களின் விழிப்பே பெருங்காரணம். தனிப்பட்ட தனித்துவ தலைவன் என்ற கருத்து மலையேறுகின்றது.

எமது பகுதியை நோக்கினுல் கறுவாக்காட்டுத் தலைவர் காலம் முடிவடைந்ததைக் காண்கின்றேம்; இன்றைய சூழ்நிலையில் மக்கள் தலைவர் பனங்காட்டவரேயாக வேண்டும். மக்கள் மத்தியில் மக்களிலொருவராக வாழ்ந்து அவர்களின் இன்ப துன்பங்களை அகக்கண்ணுல் புரிந்து அவர்களின் கண்ணீரைத்துடைக்க வல்லவனை மக்கள தலைவராக என்றும் ஏற்றுக்கொள்வர்.

எந்தச் சமூகமும் தலைவர்களில்லாத துர்ப்பாக்கியத்துக்குப் பலியாகவேண்டியதில்லை. அவ்வித நிலைக்கு மக்களே காரணம்.

தனிப்பட்ட திறமையும் தன்னலமின்மையும் நிலவிய இடத்தை ஒருமுகப்பட்டு ஒத்துழைக்கும் குழுவினரின் தலைமையே இன்று மிகவும் வேண்டப்படுகிறது.

பத்திரிகை சாதனம் இத்தகைய தொடர்பியலில முக்கிய அங்கமென்பது உண்மை; அதில் இன்றைய குறைகள் பல; ஆயினும் மேனுந்தான் எமது பேனுவுக்கு உத்வேகம் அளிக்க வேண்டுமென்பதில்லை.

பன்மொழிப் புலவர், ஆராய்ச்சிமேதை சுவாமி ஞானப்பிரகாசர், உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் சிற்பி தனிநாயக அடிகள், 'சமுதாயநீதி' ஆசிரியர் அகில இலங்கைப் புகழ் பெற்ற கல்விமான் அதிவணக்கம் . பீற்றர்பிள்ளை போன்றசான்றேர்களை உருவாக்கிய சமூகம் இப்புதிய தொடர்பியலால் நாட்டின் நலத்துக்கு ஒரு புதியதிருப்பம் கொடுக்கவல்லதென நம்பலாம்.

## நெடுந்தீவு ப.நோ. கூ.ச.

## உபதலைவராக பெண் தெரிவு

[நெடுந்தீவு]

நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் உபதலைவராக திருமதி லிலிமலர் சின்னப்பு போட்டியின்றித் தெரிவாகினர். இவர் நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நெறியாளரும் உபதலைவருமாகப் பதவி வகிக்கும் முதலாவது பெண் என்பது குறிப்பிடத்தக்கது. நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச்சங்க நெறியாளர் கூட்டத்தின்போது இத்தேர்தல் இடம்பெற்றது. கூட்டத்திற்கு சங்கத் தலைவர் திரு. நா. இராமச்சந்திரன் தலைமை வகித்தார். [அ]

வட்டுக்கோட்டைத் தொகுதி முன்னுள்
எம். பி. அமரர் கலாநிதி ஆ. தியாகராசாவின்
ஓராண்டு நினைவு தினம் இன்று

# தியாகர் மக்கள் சேவகர்



மஹாகவி பாரதிக்கு கண்ணன் ஒரு சேவகன். பரந்துபட்டுள்ள மக்கள் தொகுதிக்கு அமரர் தியாகர் ஒரு சேவகர்; தொண்டர்

கலாநிதி ஆ. தியாகராசா அமரராகி ஓராண்டான இன்று அன்னரது சேவைகளையும் சிந்தனைகளையும் நினைவுகூர்தல் தக்கது.

''சிந்தனை தேங்கிய முகம்; திரிகரண சுத்தியோடு கூடிய கருமங்கள்; நடை உடை பாவனைகள்; ஒவ்வொரு செயற்பாட்டிலும் அசைவிலும்இலட்சியப்போக்கு; நாட்டுக்காகச் சுய அர்ப்பணம்'' என்ற இந்த விவரணம் அமரர் தியாகரை விளக்க ஓரளவுபோதும் என எண்ணுகிறேம்.

கே. கே. நடராஜா
அதிபர், வட்டு. இந்துக்கல்லூரி

அமரரின் ஆழ்ந்தகன்ற அறிவுக்கு ஒரு கலாநிதிப்பட்டம் போதாது. விவசாயம், தொழில்துறை, மீன்பிடி, சுகாதாரம், நீர்விநியோகம் முதலிய பல துறைகளிலும், கல்வித்துறையிலும், அன்னரது அறிவும், அக்கறையும், அனுபவமும் அளப்பரியவை.

நாட்டின் அபிவிருத்தியின் ஆதாரம் விவசாயிகளின் அபிவிருத்தியே என்ற எண்ணத்தில், விவசாயமும் விவசாயிகளும் வளம் பெறப் பல திட்டங்களை வகுத்தவர் அமரர் தியாகர். விவசாயத்தின் ஒவ்வோர் அம்சத்தையுமிட்டு அலசி ஆராய்ந்த அவரது சிந்தனையில் தோன்றிய திட்டங்கள் பல நல்ல பயன்களை ஈட்டித்தன.

விவசாய சேவைக் குழுக்களையும், அபிவிருத்தி நிலையங்களையும்நிறுவி அமரர்செய்த சேவைகளால் நம் நாட்டு விவசாயிகளின் வாழ்வில் மிகப் பெரியதொரு மலர்ச்சி ஏற்பட்டதை நாம் மறந்துவிடவில்லை.

'விவசாயம் தாய்; தொழில்துறை தந்தை' என்ற கொள்கையே நாட்டில் சுபிட்சத்தை உருவாக்கும் என்பதில் நம்பிக்கையுடையவர் அமரர். பன்முக வரவுசெலவுத்திட்டத்தின் கீழும்,' தாம் தலைமை தாங்கிய கூட்டுறவு இயக்கத்தின் மூலமும் உருப்படியான பல தொழில்துறைகளை உருவாக்கினுர். மின்தறிகள், கைத்தறிக் கூடங்கள், தையற் பயிற்சி நிலையங்கள், உடை தயாரிப்பு நிலையங்கள், தீப்பெட்டித் தொழிற்சாலை போன்ற பலவற்றை உருவாக்கிப் பலநூறு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பையும், ஐரோப்பிய நாடுகளுக்குஏற்றுமதிசெய்த தைத்த ஆடைகள்மூலம் அந்நியசெலாவணியையும் ஈட்டித் தந்தார்.

யாழ். குடாநாட்டின் பல பகுதிகளில் நன்னீர் பெறுதல் ஒரு பூதாகாரமான பிரச்சினையாகவே இருந்துவருகிறது. இதற்குத் தீர்வுகாண முயன்றேரில்முன்னணிலையில் திகழ்ந்தவர் அமரர் தியாகர். அராலிப் பகுதியிலும் காரைநகர்ப் பகுதியிலும் அவர் தொடக்கி வைத்த குழாய் நீர்த் திட்டங்கள் அப்பகுதி மக்களுக்கு வரப்பிரசாதமானவை.

30 ஆண்டுகள் ஆசிரியராகவும்–அதிபராகவும் கல்வித்துறையில் பணியாற்றிய கல்விமானுகிய இவர், ஆங்கில காலனித்துவக் கல்வித்திட்டத்தை உதறி எறிந்து, நமது நாட்டிற்கு ஏற்ற தேசிய கல்வித்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் என வாதாடினர். பாராளுமன்றத்திலும் இதையே வற்புறுத்தினர்

ஆசிரியர் அந்தஸ்தும், கல்வியின் தரமும் உயரவேண்டும் என்பதற்காகத் தமது தொகுதியில் பாடசாலைகளின்தேவைகளுக்கேற்ப இடவசதி, கட்டிட வசதி, விஞ்ஞான கூடம், விளையாட்டு மைதானம் என்பவற்றைப் பெற்றுத் தந்தவர். பாடசாலைகளைத் தரமுயர்த்தவும் உயர்வகுப்புக்களை நடாத்தவும் அனுமதி பெறவும்உதவியவர்.

எல்லாவற்றிலும் மேலாக, தாம் அதிபராகவிருந்து உடல் பொருள் ஆவியினை அர்ப்பணித்துக் கட்டியெழுப்பிய காரை. இந்துக் கல்லூரியைப் பேணி வளர்க்க அமரர் எடுத்துக் கொண்ட ஆர்வமும் அக்கறையும் அபூர்வமானவை. அதனுல், இன்றைய தினம் நாட்டின் பல பகுதிகளிலும், வெளிநாடுகளிலும் காரை. இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்களான மருத்துவ, விஞ்ஞான, தொழில்நுட்ப விற்பன்னர்களும் பேராசிரியர்களும் எம்மோடு சேர்ந்து அமரர் தியாகருக்கு அஞ்சலி செலுத்துகின்றனர்.

அவர்கள் மட்டுமல்லர் தியாகரோடு நெருங்கிப் பழகாதோருக்கு முதலில் அவரது சொல், செயல்களின் அர்த்தங்கள் பிடிபடா. அவர் ஒரு புரியாதபுதிர். அதனுல், முன்கோபி'' என்ற அபிப்பிராயம் தோன்றியது. ஆனுல் இப்படி அபிப்பிராயம் கொண்டோரே அவரோடு நெருங்கிப் பழகியபோது, தியாகராசா என்ற உருவிலே ஒரு மனிதாபிமானி – சேவையுள்ளம்படைத்த ஒரு நல்லாத்மாவையே கண்டார்கள் அவ்வாறு கண்டவர்களும் இன்று அமரருக்கு அஞ்சலி செலுத்துகிறுர்கள்

அமரர் தியாகரின் சேவைகளையும் சிந்தனைகளையும் நினைவுகூரும் இத்தினத்தில், அன்னரின சிந்தனைகளை நிலையானவையாக்கும் வகையில் அன்னருக்கு அஞ்சலி செய்ய வழி வகுப்பது எமது கடனுகும்.

## ஆலய தர்மகர்த்தாக்களுடன்

## அறவழி போராட்டக் குழு பேச்சுவார்த்தை

(மட்டுவில்)

உடுப்பிட்டித் தொகுதியில் ஆலயங்களில் சமத்துவ வழிபாட்டிற்கு இதுவரை இடமளிக்கப்படாத ஆலயங்களின் தர்மகர்த்தாக்களையும், முகாமையாளர்களையும், பரிபாலன சபைத் தலைவர்களையும் அறவழிப் போராட்டக் குழு நேரடிலாகச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தும். ஜூன் மாதம் முதல் தேதியிலிருந்து அறவழிப் போராட்டக் குழு இந்த நடவடிக்கையில் ஈடுபடவுள்ளது.

ஆலயங்களில் மனிதாபிமான உரிமையுடன் ஆண்டவன் முன்னிலையில் மக்கள் அனைவரும் சமமாக வழிபாடு நடத்தவும், சாதியின் பெயரால் நிலவும் ஏற்றத்தாழ்வுகளை அகற்றவுமே அறவழிப் போராட்டக் குழு இந்த நட நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

## உள்ளூராட்சி

## சிற்றூழியர் சங்கம் 30ல் கூடுகிறது

பண்டத்தரிப்பு)

ஜனநாயக உள்ளூராட்சி சிற்றூழியர் தொழிற்சங்கத்தின் 3–வது வருடாந்தப் பொதுக்கூட்டம் இம்மாதம் 30-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ் மாவட்ட அபிவிருத்தி சபை உடுவில் உப அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. சங்கத்தலைவர் திரு. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் மாவட்ட அபிவிருத்திசபை உப அலுவலகங்களில் கடமையாற்றும் சிற்றூழியர்களை உள்ளூராட்சி சேவை ஆணைக்குழுவின் அதிகாரத்தின்கீழ் கொண்டுவருதல் பற்றிய பிரேரணை உட்பட மற்றும் பல பிரேரணைகள் சமர்ப்பிக்கப்படுயரம். [அ]

# “கட்டுப்பாட்டுடன் இளைஞர்கள் ஒரே தலைமையின் கீழ் இயங்கவேண்டும்

## கட்டுப்பாடற்றஇயக்கம் கடிவாளம் இல்லாத குதிரை” என்கிறார் யோகேஸ்

(நல்லூர்)

“கட்டுப்பாடற்ற இயக்கம் கடிவாளமற்ற குதிரைக்கு ஒப்பானது. எனவே தமிழ் ஈழ விடுதலையை வேண்டி நிற்பவர்கள் தமக்குள் வேற்றுமைகளுக்கு இடமளியாது, கட்டுக்கோப்போடு ஒரு கொடியின் கீழ் தாம் கொண்ட இலட்சியத்தை ஈடேற்ற முன்வர வேண்டும்”

இவ்வாறு நேற்று முன்தினம் கட்டப்பிராய் கலைமணி சனசமூக நிலையத்தின் 33வது ஆண்டு நிறைவுவிழாவிற்கு பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் யாழ் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் கூறினார்.

நிலையத்தலைவர் திரு. இ. இலட்சுமிகாந்தன் தலைமையில் நடைபெற இவ்விழாவில் யாழ் எம். பி. மேலும் பேசுகையில் கூறியதாவது:

“இங்கு சில பிரச்னைகள் சுட்டிக்காட்டப்பட்டன. இந்த நிலையத்திற்கு மின்சாரவசதி அளிக்கவேண்டும் என்ற கோரிக்கையும் விடப்பட்டது. இவைபோன்ற பிரச்னைகள் இன்று பொதுவான பிரச்னைகள். யாழ்ப்பாணத்து மக்கள் பெரும் தண்ணீர் பிரச்னையை எதிர்நோக்க வேண்டியிருக்கிறார்கள். இவர்களுக்குத் தேவையான தண்ணீர் திருநெல்வேலியிலுள்ள ஒரு கிணற்றில் இருந்து மட்டுமே கிடைக்கின்றது இக்கிணற்றை சற்று ஆழமாக்கினால்கூட அது உப்புநீராகிவிடக்கூடிய நிலையில் இருப்பதாக நிபுணர்கள் அறியத்தருகிறார்கள். இதே போன்று 600 நோயாளரை மட்டுமே பராமரிக்கக்கூடிய யாழ் ஆஸ்பத்திரியில் இரண்டாயிரம் நோயாளர்கள் தங்கிச் சிகிச்சைபெற்றுவருகிறார்கள். இதனால் இவர்கள் பெரும் இடநெருக்கடிகளுக்குள்ளாகிறார்கள். படுக்கை வசதிகள் கூட இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். ஏன் இந்த நிலைமை? நாம் அனைவருமே தமிழ்ப்பிரதேசங்களில் பரந்து குடியேறவேண்டும்.

கடந்தகாலங்களிலே ஆட்சியாளர் எமக்கெதிராக மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகளினாலும் கடந்த ஒரு வருடத்திற்குள் ஏற்படுத்திய கொடுமையாலும் தமிழ் மக்கள் மத்தியில் புதிய அழிவுகள் ஏற்பட்டுள்ளன. இந்த நிலையில் கட்டுக்கோப்பு இல்லாத நமது இளைஞர்களால் புதிய விபரீதநிலை இன்று ஏற்பட்டுள்ளது. இனவிடுதலையே வேட்கையாகக் கொண்ட எந்த ஒரு விடுதலை இயக்கத்துக்குள்ளும் கருத்துவேறுபாடுகள் ஏற்படுவது சகஜம். இது வரலாற்று உண்மையும்கூட. ஆயினும் இவ்வாறான கருத்து முரண்பாடுகளுக்கு இடமளித்துக் கட்டுப்பாடற்ற நிலையை ஏற்படுத்துவது நாம் கொண்ட கொள்கையை, இலட்சியத்தைப் பின்னிழுத்துச்செல்வதாகும். எனவேதான் கடின உழைப்போடு இயங்கும் இளைஞர்கள் ஒற்றுமை உணர்வோடும், ஒரே தலைமை என்கின்ற கட்டுப்பாடுடனும் இயங்கமுன்வரவேண்டும்.

கடந்த சில நாட்களாக நடைபெறும் நிகழ்ச்சிகள் தமிழ்தேசிய இனத்தின் எதிர்கால நம்பிக்கைக்குக் குந்தகம் விளைப்பனவாய் இருப்பது மிகுந்த மனவேதனையை ஏற்படுத்துவனவாயுள்ளன. இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ் மக்கள் மத்தியில் ஒற்றுமை என்பது மிக அத்தியாவசியமானதாகிறது. தமிழர்கள் பிரிவினைகளுக்கு இடமளித்து மாற்றானுக்கு இடமளித்துவிடக்கூடாது.

### இயக்கத்தின் முடிவே எனது முடிவு

அண்மையில் ஒரு பத்திரிகையில் நான் தமிழர் விடுதலைக் கூட்டணியில் தான் அங்கம் வகிப்பதாகவும் ஆயினும் அரசுடனான பேச்சுவார்த்தைக்கு நான் எதிரானவன் என்றும் பொருள்பட எழுதியிருந்தது. நான் அங்கம் வகிக்கும் இயக்கம் எந்தமுடிவு எடுத்தாலும் அதுதான் எனது முடிவு. ஒரு இயக்கத்தில் இருப்பவர்கள் அந்த இயக்கத்திற்குக் கட்டுப்பட்டவர்கள். எனவே நாம் எதைச் செய்தாலும் எமது இயக்கத்தின் அனுமதியோடுதான் செய்வோம். இப்படித் தவறாக எழுதி மக்கள் மத்தியில் தவறான கருத்துக்களை ஏற்படுத்துவது அவர்களது நோக்கமாக இருக்கலாம் ‘இவற்றிற்கு மறுப்புத் தெரிவிப்பதானால் ஒவ்வொரு நாளுமே மறுப்புத் தெரிவிக்கவேண்டியிருக்கும். (அ)

## இளைஞரின் கண் குருடானது?

[மன்னார்]

வயோதிபரின் கண்நோய்க்கு வைத்தியரால் வழங்கப்பட்ட மருந்தை இளைஞர் ஒருவர் தனது கண்நோய்க்குப் பாவித்ததால் இளைஞரின் ஒரு கண் குருடானது.

மன்னார்–வங்காலை கிராமத்தில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் யோகம் என்பவரே பாதிக்கப்பட்டவராவார்.

50வயதுடையவயோதிபரின் கண்நோய்க்கு வைத்தியரால் கொடுக்கப்பட்ட மருந்தை 27வயதான யோகம் என்பவர் தனது கண்நோய்க்குப் பாவித்ததாலேயே ஒரு கண் குருடானது என தெரிவிக்கப்படுகிறது.

## “தியாக உணர்வே சிறப்பான வாழ்வாகும்”

[சுழிபுரம்]

“தியாக உணர்வை மேன்மைப்படுத்தி வாழும் வாழ்வே சிறப்புடையதாகும். இத் தன்மையை ஆரம்பத்தில் நாம் பெற்றுவிட்டால் நாம் பிறந்ததனாலான பயனைப் பெற்றுவிடலாம். எங்கள் சைவ சமயம் தியாக வாழ்வு வாழும் வழி இதுதான் என்பதை ஆரம்பத்திலேயே காட்டுகின்றது. இதனால் எங்கள் சைவசமயம் மேன்மையுடையதாக விளங்குகின்றது”

இவ்வாறு சட்டத் தரணி பொன். சிவபாலன் பண்ணாகம் ஸ்ரீமுருகன் இந்து சமய விருத்திச் சங்க ஆண்டு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

## “மாணவர் மத்தியில் மொழி ஆர்வம் குன்றிவிட்டது”

### கல்விப்பணிப்பாளர் கவலை

(கரவெட்டி)

“இக் கால மாணவர்கள்மத்தியில் மொழி ஆர்வம் குன்றியுள்ளது. பகிரங்க பரீட்சை பெறுபேறுகளின் முடிவுகளைப் பார்க்கும்போது தமிழ் மொழியில் தேர்ச்சி குறைவாகக் காணப்படுகின்றது. மற்றைய பாடங்களைக் கற்பதற்கும் மொழிதான் திறவுகோலாக அமையவேண்டும்”.

இவ்வாறு வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு.க. சிவநாதன் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றயாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ் திறன் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ். பிரதம கல்வி அதிகாரி திரு வெ. சபாநாயகம் தலைமை வகித்துப் பேசுகையில்: “நீண்ட நாள் ஓய்வின் பின் யாழ். மாவட்டக் கல்வி அதிபதி திரு. சிவநாதனின் முயற்சியினால் இப் போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டன. தமிழ் மொழியை சிறப்பாகக் கற்று, பேச்சில் மட்டுமல்ல, பாஓதல் நடிப்பு முதலியவற்றிலும் மொழியைப் பயன்படுத்த இன்றைய போட்டியாளர்களுக்குச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது” என்றார்.

புங்குடுதீவு வட்டாரக் கல்வி அதிகாரி கே. குகதாஸன் நன்றி தெரிவித்துப் பேசினார்.

## ஆலய மண்டபத் திறப்பு விழா

(உரும்பராய்)

உரும்பராய் பர்வதபத்தினி அம்மன் கோயில்புதிய உள்வீதி மண்டபம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி கா. கைலாசநாதக் குருக்களினால் இம்மாதம் 27ம் திகதி வியாழன் மாலை மங்கள விளக்கேற்றித் திறந்து வைக்கப்படவுள்ளது.

ஒருலட்சரூபா செலவில் அமைந்துள்ள சித்திர வர்ண வேலைப்பாடுகளுடன்கூடிய இம் மண்டபத் திறப்பு விழாவையொட்டித் தமிழ்நாடு செம்பன்னார் கோயில் சகோதரர்களின் நாதஸ்வரக்கச்சேரியும் திருமதி மனோன்மணி சண்முகதாஸின் சிறப்புரையும், கலாவிநோதன் சின்னமணி குழுவினரின் வில்லிசை விருந்தும் இடம்பெறவுள்ளன.

கட்டடவேலை செய்த கலைஞர்களைக் கௌரவிக்கும் வைபவம் உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் பிரதி அதிபர் திரு. அ. பஞ்சாட்சரம் தலைமையில் நிகழும் பர்வத பத்தினி அம்மன் தேவஸ்தான பரிபாலன சபையின் கௌரவதனாதிகாரி திரு பொ. ஸ்ரீநடராசா நன்றியுரை வழங்குவார். (அ)

## “சமுதாயத்தின் கலை, கலாச்சார வளர்ச்சி”

[மட்டுவில்]

“ஒரு சமுதாயத்தின் கலை, கலாச்சாரம் வளருவதைத் தொடர்ந்தே அந்த சமுதாயத்தின் பண்பு, நாகரிகம் ஆகியன வளர முடியும். இப்பகுதி மக்களின் கலை கலாச்சார வளர்ச்சிக்காக இக் கலையரங்கு பெரிதும் துணையாக அமையும்”

இவ்வாறு சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் கலையரங்கிற்கான அடிக்கல்லை நாட்டி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார். கைதடி தெற்கு சனசமூக நிலையத் தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்த அடிக்கல் நாட்டு விழாவில் திரு. நவரத்தினம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:–

“ஒரு சமுதாயத்தின் தலையான சொத்து அச் சமுதாயத்தின் கலையும், கலாச்சாரமாகும். அப்படியான கலையை எமது சமுதாயம் பேணி வளர்க்க எடுத்துக்கொள்ளும் முயற்சி பாராட்டுக்குரியது என்றார். மற்றும் பலர் உரை நிகழ்த்தினர்.

## மனனப்போட்டி

(சுழிபுரம்)

அபிராமியந்தாதி மனனப் போட்டியை வழக்கம்பரை சனசமூகபஜனைச் சபையினர் நடாத்த ஏற்பாடு செய்துள்ளனர்.

இப்போட்டி அகிலஇலங்கை ரீதியாக நடைபெறவுள்ளது.

நூறு பாடல்களையும் மனனம்செய்து சரியாக ஒப்புவிப்பவர்களுக்கு ரூபா 500 ரொக்கமாக வழங்கப்படவுள்ளது. மனனப்போட்டி எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறவுள்ளது.

## பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி இல்லப்போட்டி

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர்போட்டி கடந்த வெள்ளிக்கிழமையன்று நடைபெற்றபோது கிருபை இல்லம் சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. கில்லீஸ் இல்லம் இரண்டாம் இடத்தையும், கொவுலன்ட் இல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றன. போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை பரிசளிப்பு வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட யாழ். கல்வித் திணைக்கள கல்வி அதிகாரி செல்வி ஆர். நவரத்தினசிங்கம் வழங்கினார். [அ]

## “சிங்கள-தமிழ் மாணவர் ஐக்கியம் வளரட்டும்”

### கம்யூ. கட்சி (மாவோ) அறிக்கை

யாழ்ப்பாணம்)

“பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு பலமாதங்களாக விசாரணையின்றி தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள இளைஞர்களையும், மாணவர்களையும் உடன் விசாரணை செய்யவேண்டும் அல்லது விடுதலை செய்ய வேண்டும். குறிப்பாகபல்கலைக்கழக மாணவன் அ விமலராஜாவை உடன் விடுதலை செய்யக்கோரி 14–5–82 ல் யாழ்.பல்கலைக்கழக மாணவர் அவையின் தலைமையில் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் மாணவர்கள் பாடசாலைகளை பகிஷ்கரித்த செயலையும் மேலும் 17–5–82 அன்று யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் பொலிஸ் அனுமதிகோராமல் அரசுக்கெதிராக ஒருஆர்ப்பாட்ட ஊர்வலத்தை யாழ்ப்பாணத்தில் நடத்தியதையும், மாணவன் விமலராஜாவை விடுதலை செய்யுமாறு கோரிநேற்று மாணவர்கள் உண்ணாவிரதம் இருந்ததையும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (மாஓவிஸ்ட்) வடபிரதேசக்கமிட்டி வரவேற்றுள்ளது.

இது சம்பந்தமாக கமிட்டி வெளியிட்ட அறிக்கையில் கூறப்படுவதாவது “தமிழ் மாணவர்களின் பாடசாலைப் பகிஷ்கரிப்புப் போராட்டத்துக்கு ஆதரவாக பெரும்பான்மையான சிங்கள மாணவர்கள் படிக்கும் கொழும்புப்பல்கலைக் கழக மாணவர்கள் அரைநாட் பாடசாலை பகிஷ்கரித்த செயலும் மேலும். தென்னிலங்கையில் உள்ள சகல பல்கலைக்கழகங்களைச் சுற்றி தமிழ் மாணவர்களின் போராட்டத்துக்கு ஆதரவாக சுவரொட்டிகளையொட்டிய இம்முற்போக்கு சம்பவங்களை எல்லாம் இந்தநாட்டு வகுப்புவாத சக்திகளுக்கு கொடுத்த பெரும் சம்மட்டி அடியாகும்.

“எதிர்காலத்தில் சிங்கள தமிழ் மாணவர்களின்ஐக்கியம் மேலும் வளர்ந்து பாட்டாளி வர்க்கப் புரட்சிப் போராட்டத்துக்கு உதவ வேண்டும்”.

## அணைகட்டுவதில் தே.இ.சே. மன்றம்

(பண்டத்தரிப்பு)

தேசிய இளைஞர் சேவை மன்றம் அராலி தரணர் அணைக்கட்டு அமைக்கும் வேலைகளை ஆரம்பித்துள்ளது. 22 ஆயிரம் ரூபா இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருப்பதாகவும், சுமார் 50 இளைஞர்களும், யுவதிகளும் அணைக்கட்டு அமைக்கும்வேலைகளில் ஈடுபட்டு வருவதாகவும் வட்டுக்கோட்டைத் தொகுதித் தேசிய இளைஞர் சேவை மன்ற உத்தியோகத்தர் திரு. ரி. சிவ தெட்சண்மூர்த்தி தெரிவித்தார்.

## விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன

(சாவகச்சேரி]

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஸ்கந்தபுர இளைஞர் யுவதிகளுக்கு இம் மன்றத்தால் விளையாட்டு உபகரணங்கள் கையளிக்கப்பட்டது.

இவ்வைபவத்தில் கிளிநொச்சி இளைஞர்சேவை அதிகாரி திரு. கு. பரராசசிங்கம் உரையாற்றுகையில் கூறியதாவது:

‘ஒருநாட்டின் மதிப்பிட முடியாத செல்வங்கள் இளைஞர்களே அவர்கள், வீரம், தியாகம் விடாமுயற்சி ஆகிய பண்புகளைக் கொண்டிருக்க வேண்டுமென்றும் இத்தகைய பண்புகள் இருந்தபடியினாற்றான் நீங்கள் பெரிய ஸ்கந்தபுர வன்னேரிக்குள வீதியை அமைத்துள்ளீர்கள்.

ஒரு சனசமூக நிலையமோ அல்லது இளைஞர் விளையாட்டுக்கழகமோ அமைப்பு ரீதியாக இந்தப்பகுதியில் இயங்காத குறையினை தேசிய இளைஞர் சேவை மன்ற இளைஞர் கழகத்தினராகிய நீங்கள் நீக்குவதற்கு வேறுபாடற்ற முறையில் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டுமென்றார்.

இளைஞர்குழுத் தலைவர் திரு. எஸ். சுந்தரலிங்கம், திரு.சீ.பி. இராசநாயகம் ஆகியோரும் உரையாற்றினர்.

## உற்சவம்

நெடுந்தீவு)

சண்டிலிப்பாய் ஆலங்குளாய் முருகமூர்த்தி கோவிலின் வருடாந்த உற்சவம் நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. 10 தினங்கள் திருவிழா நடைபெறும். (அ)

## பஸ் விபத்தில் பலியானவர்:

# இரண்டு லட்சம் ரூபா நஷ்டஈடுகோரி மனு தாக்கலானது

(மாவிட்டபுரம்)

தமது தந்தையின் மரணத்திற்குக் காரணமாக இருந்த போக்குவரத்துசபை பஸ், தனியார் மினி பஸ் ஆகியவற்றின் உரிமையாளர்களிடமிருந்து பிள்ளைகள் இருவர் இரண்டு லட்ச ரூபா நஷ்டஈடு கோரி யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளனர்.

1981ம் ஆண்டு ஜூன் மாதம் 9ம் திகதி இராணுவத்தினரை ஏற்றிவந்த கொழும்பு தெற்கு பிராந்திய போக்குவரத்து சபையின் பஸ் ஒன்றும், பிரயாணிகளை ஏற்றிச்சென்ற தனியார் மினி பஸ் ஒன்றும் யாழ்ப்பாணம் முட்டாஸ் கடைச் சந்தியில் மோதி விபத்திற்குள்ளானதில் இளவாலையைச் சேர்ந்த இளையதம்பி கனகசபை என்பவர் பலியாகியிருந்தார். இவரது மனைவி மேற்படி போக்குவரத்து சபையிடமிருந்தும், மினி பஸ் உரிமையாளரிடமிருந்தும் தலா ஒரு லட்ச ரூபா நஷ்டஈடு கோரி ஏற்கனவே மனுதாக்கல் செய்துள்ளார்.

தற்போது மரணமானவரின் பராயமடையாத பிள்ளைகள் மைதிலி (20 வயது) சுமதி (15 வயது) ஆகிய இருவரும் தலா 50 ஆயிரம் ரூபா வீதம் ஒரு லட்ச ரூபா நஷ்டஈடு கோரி மனுதாக்கல் செய்துள்ளனர்.

மேற்படி இரு பிள்ளைகளதும் சார்பில் சட்டத்தரணி வி. எஸ். கணேசலிங்கம் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் இம்மனுக்களை தாக்கல் செய்தார். நீதிபதி திரு. எஸ். ஆனந்தக்குமாரசாமி கொழும்பு தெற்கு பிராந்திய போக்குவரத்து சபைக்கும், பஸ் சாரதி கே. எஸ், நிமால்என்பவருக்கும் மினி பஸ் உரிமையாளர் அருட்பிரகாசம் அருள்ஜோதலிங்கம், சாரதி அருட்பிரகாசம் அருள் புரிராஜா ஜெயசிங்கம் ஆகியோருக்கும் அறிவித்தல் அனுப்ப உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தார்.

## திருத்தம்

(கொழும்பு)

மக்கள் வங்கி ஆரம்பிக்கப்பட்ட பின்னர் கிராமிய வங்கிகளிலிருந்து மக்கள் வங்கிக்கு மாற்றப்பட்ட ஊழியர்கள் இப்போது பதவி உயர்வுகளின் போது புறக்கணிக்கப்படுகின்றனர் என்று நேற்றைய 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவந்த தகவல் தவறானதாகும். மக்கள் வங்கி ஆரம்பிக்கப்பட்டபின்னர் கூட்டுறவு வங்கிகளிலிருந்து மக்கள் வங்கிக்கு மாற்றப்பட்ட ஊழியர்கள் இப்போது பதவி உயர்வுகளின்போது புறக்கணிக்கப்படுகின்றனர் என்பது சரியானதாகும்.

## அமைதி...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வருகிறது. இந்து மகாசமுத்திரப் பிராந்தியத்தில் பதட்ட நிலையும், நெருக்கடியும் உருவாகிவருவதற்கு அமெரிக்காவே பூரண காரணம்'' என்று மாநாடு நிறைவேற்றிய தீர்மானத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## ஏக்கர் வரி வழக்கு

(சாவகச்சேரி)

சாவகச்சேரித் தொகுதியிலுள்ள நெல் வயல்களுக்கு அதன் உரிமையாளர்கள் ஏக்கர் வரி கட்டாதிருந்தால் அவர்கள் மீது வழக்குத் தொடர நடவடிக்கை எடுக்கும்படி கமத்தொழிற் பகுதி பெரும்பாக உத்தியோகத்தர் அறிவித்துள்ளதைத் தொடர்ந்து வரணிப்பகுதியில் 10 பேர் மீது வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## விவசாயப் போட்டி

[துணுக்காய்]

ஏர்பூட்டு விழாவையொட்டி நடைபெறும் உழவர்களுக்கிடையிலான விவசாயப் போட்டி ஒவ்வொரு மாவட்டத்திலும் நடைபெற்று வருகின்றது.

முல்லைத்தீவு மாவட்டப் போட்டிகள் எதிர்வரும் சனிக்கிழமை முல்லைத்தீவிலும், வவுனி குளத்திலும் நடைபெறவுள்ளது. இப்போட்டிகள் எருதுமாடு அல்லது எருமை மாட்டைக்கொண்டு உழுதல், மற்றது நிலத்தை கொத்தி பண்படுத்தல் என இரண்டு போட்டிகள் இடம் பெறவுள்ளது.

இப்போட்டிகளில் முதலாவது இடத்தைப் பெறுபவருக்கு ரொக்கப் பரிசில்கள் வழங்கப்படுவதுடன் தேசிய ரீதியாக ஸ்ரீ ஜயவர்த்தனபுரத்தில் நடைபெறும் இறுதிப் போட்டியிலும் கலந்துகொள்வார்.

இவர்களுக்கான பரிசில்களை ஜனாதிபதி வழங்குவார் எனவும் தெரிவிக்கப்பட்டது

# இன்றைய பலன்

வைகாசி மாதம் 11ம் திகதி

செவ்வாய்க்கிழமை

(25—5—82)

மேடம்: மெத்தவும்பொருள் வந்து சேரும். மேலிடத்து ஆதரவும் தப்பாமல் கிட்டும். தித்திக்கும் செய்தியுடன் தேனுனை வாழ்வுமுண்டு,

இடபம்: நெஞ்சமும் புண்ணாகி நெடுமூச்சும் வெளிக்கிளம்பும். தொழிலாலேதொல்லைகள் தோன்றும். இறைவழிபாடு நன்று. நல்லதினம்.

மிதுனம்: முன்னேற்றத்தில் முட்டுக்கட்டை தோன்றும் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் திண்டாடுவீர்கள். சிலர் வாழ்க்கையில் கடன்பட நேரிடலாம்.

கடகம்: பிரச்னைகள் பல இன்று நல்ல முடிவை அடையும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் நிலவும். பேச்சில் நிதானம் பெருமையைத் தரும். சுமாரான தினம்.

சிங்கம்: அத்திரப்படுவதன் மூலம் அருமையான சந்தர்ப்பத்தை இழக்க நேரிடும். மேலிடத்துச் செல்வாக்கும் பாதிக்கப்படக் கூடும், அன்பாக நடந்துகொள்ளவும்.

கன்னி: இதயத்தைத் தொடும் சம்பவங்கள் இடம் பெறும். சிலருக்கு புதிய வாகனத்தில் முதலீடு செய்யும் சந்தர்ப்பமும் ஏற்படலாம். மாதாவழியால் மகத்தான முன்னேற்றமும் உண்டு.

துலாம்: புகழ்தரும் காரியங்களில் ஈடுபடுவீர்கள், அரசியல் வாதிகளுக்கு நல்ல ஆதாயம் கிடைக்கும். உறவு முறைகள் பலப்படும். நல்ல தினமாகும்.

விருச்சிகம்: அரசினரின் ஆத்திரப்பார்வை உங்கள் பக்கம் திருப்பும். முன்னேற்றத்தை தடுப்பதற்கு எதிரிகள் முனைவர். அமைதி விரும்பத்தக்கது

தனு: வாழ்க்கையில் தென்றல் வீசும். கணவன் மனைவி உறவு அன்பு கொண்டதாக இருக்கும். இன்று சுகபோகமான தினமாகும்.

மகரம்: அரசபயத்திற்குஇடமுண்டு. வழக்கு விவகாரங்களில் மாட்டிக்கொள்ள வேண்டாம். நண்பரின் நச்சரிப்பு அதிகரிக்கலாம்.

கும்பம்: உங்கள் நடவடிக்கையில் தனிச்சிறப்புத் தென்படும். பெரியவர் ஒருவர் உங்களுக்குக் கைகொடுத்து உதவுவார். குடும்பம் வளம்நிறைந்ததாகக் காணப்படும்.

மீனம்: குடும்ப மகிழ்ச்சியுண்டு. உயர் பீட ஆதரவும் உரிமையும் கிடைக்கும். வாகன நலனும் உண்டு, கடமையிலும் உற்சாகம் உண்டு.

சோதிடக்கலாநிதி

திருமலை

க. வேலுப்பிள்ளை

## "அருளாளர் இயக்கம் அவசியம்"

(சுழிபுரம்)

"அருளாளர்கள் இயக்கம் ஒன்று இருப்பது மிகவும் அவசியமாகும். பல தொல்லைகளை விலக்கி இன்பமாக வாழலாம் என்பதை இக்கூட்டத்தினர் செயல்படுத்திக் காட்ட வேண்டும். பண்டிதர் அ ஆறுமுகம் ஒரு சிறந்த புலவர் வரிசையில் முதலிடம் வகிக்கக் கூடியவர். இவரது கவிதையாற்றலை விசுவத்தனை பிள்ளைத் தமிழ் நூல் நன்கு பறைசாற்றும். இவ்வாறு திரு. சோ. க. வேலாயுதர் விசுவத்தனை முருகன் பிள்ளைத் தமிழ் நூல் வெளியீட்டுக் குழுவின் விசேட கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.


நாளை (26-5-1982) அதிர்ஷ்டம் பார்க்கும் தினம்!

நஷனல் - சொனி - NATIONAL - SONY

தொலைக்காட்சிப் பெட்டிகளை 1-3-82க்கும் 15-5-82க்கும் இடையில் எமது ஸ்தாபனத்தில் கொள்வனவு செய்தோரில் அதிர்ஷ்டசாலிகளை தேர்ந்தெடுக்கும் பரிசுக் குலுக்கல் தகுதிவாய்ந்த நடுவர்கள் முன்னிலையில் 26-5-82 மாலை 3 மணிக்கும் 4 மணிக்கும் இடையில் நடைபெறவுள்ளது.



★ 1ம் பரிசு NATIONAL தொலைக்காட்சிப் பெட்டி

★ 2ம் பரிசு ASIA சைக்கிள்

★ 3ம் பரிசு NATIONAL றைஸ் குக்கர்

ஆகிய பெறுமதிமிக்க பரிசுகளை வென்றெடுக்கும் அதிர்ஷ்டசாலிகள் நீங்களா என்பதை அறிந்துகொள்ளவும் - விழாவில் கலந்துகொண்டு சிறப்பிக்கவும் உங்களை அழைக்கின்றோம்.

சி. சின்னத்துரை அன் பிரதர்

39, K.K.S. வீதி, தொலைபேசி: 283 - 284 தந்தி: கல்கி யாழ்ப்பாணம்.

வெஸ்லி 3-6-82 வரை
(மானிப்பாய்) தினசரி 6-15, 9-15, சனி, ஞாயிறு 2-30
கமல் - ஸ்ரீபிரியா - நம்பியார்
நீயா?
[இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி]
(கலர்)

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 5 காட்சிகள்
THUNDER BALL
28-5-82 முதல்
லொறி ட்ரைவர்
ராஜாக்கண்ணு

லிடோ தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
சிவாஜி
தர்மராஜா
(புத்தம்புதிய பிரதி)

ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
ரஜனிகாந்த்—ஸ்ரீபிரியா நடித்த
பொல்லாதவன்
(ஈஸ்ட்மன் கலர்)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
2-வது மாதமாக (சில தினங்கள் மட்டும்)
ஸ்ரீ பிரியா, சுபாசினி, கமல், ரஜனி, நாகேஷ்
இன்னும் பல நட்சத்திரங்கள் நடித்த
நட்சத்திரம்
(ஈஸ்ட்மன் கலர்)

ராணி
(யாழ். நகர்)
Daily 5 shows
From 25 — 26-5-82
Clint Eastwood in
BRONCO BILLY

மனோகரா (யாழ்ப்பாணம்)
வெற்றி முரசுகொட்டும்
3-வது வாரம்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
மாதர்கள் கூட்டம் அலைமோதுகிறது
கார்த்திக் ராதா
தியாகராஜன் நடித்த
அலைகள் ஓய்வதில்லை
(கலர்)

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 10-30, 2-30, 6-15, இரவு 9-30

ஆயிரக்கணக்கான ரசிகர்களின் அன்புக்கு அடிமைகொண்டு திரை அரங்கு நிறைந்த காட்சிகளாக
ஸ்டைல் நடிகர்
ரஜனிகாந்
விஜயன்
கராத்தே மணி
சுஜாதா
ரதி
அன்புக்கு நான் அடிமை
[ஈஸ்மன் கலர்]

ஹவுஸ் புல்... ஹவுஸ் புல்... ஹவுஸ் புல்...
சாந்தி (யாழ்நகர்) 10-30, 2-30, 6-15, 9-45
வெற்றிப்படம் 'குரு' தயாரிப்பாளர்களின்
மற்றுமோர் வெற்றிப்படைப்பு!

தென்னகத்தில் மிகுந்த பரபரப்பூட்டி காட்சியளித்த விறுவிறுப்பு மிகு வண்ணத்திரையோவியம்
கமல் (இருவேடங்கள்)
சுஜாதா, சுமன்,
தேங்காய், நாகேஷ்.
கடல் மீன்கள்
தவிர்க்கமுடியாத காரணங்களால் காட்சிகள் முன்கூட்டியே ஆரம்பிக்கப்படுவதால் ஆசனங்கட்கு முந்துங்கள்


# 'ஈழநாடு' வெற்றிக்கிண்ண மென்பந்து கிரிக்கெட் போட்டி

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை ரீதியில் நொதேர்ண் ஸ்போட்ஸ் சஞ்சிகையின் ஆதரவில் ''ஈழநாடு'' வெற்றிக்கிண்ணத்திற்கான 11 பேர் கொண்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியும் 6 பேர் கொண்ட மென்பந்து கிரிக்கட்போட்டியும் செங்குந்தா இந்துக் கல்லூரி மைதானத்தில் ஜூன் மாதம் நடுப்பகுதியில் நடைபெறவுள்ளது.

இவ்விரு போட்டிகளில் வெற்றிபெறும் முதலாம், இரண்டாம், மூன்றும், நான்காம் கழகங்களுக்கு வெற்றிக் கிண்ணங்கள் வழங்கப்படும். அத்துடன் சிறந்த துடுப்பாட்டக்காரருக்கும் சிறந்த பந்து வீச்சாளருக்கும் சிறந்த சகலதுறை வல்லுனருக்கும் பரிசில்கள் வழங்கப்படும்.

கடந்த ஆண்டுகளில் நடைபெற்ற போட்டிகளில் அரியாலை வி. கழகம், நொதேர்ண் ஸ்போட்ஸ் வி. கழகம், சென்றலைட்ஸ் வி. கழகம், நல்லூர் ஸ்டார் வி. கழகம் சாம்பியன் போட்டிக்கு தெரிவானது குறிப்பிடத்தக்கது.

அகிலஇலங்கை ரீதியில் முதல்தடவையாக 16 வயதுக்குட்பட்ட மென்பந்து கிரிக்கட் போட்டியை நொதேன் ஸ்போட்ஸ் நடத்தியிருந்ததும் குறிப்பிடத்தக்கது. இப்போட்டிக்கான விபரங்களை நொதேர்ண் ஸ்போட்ஸ் 338 பருத்தித்துறை வீதி, நல்லூரில் அறிந்துகொள்ளலாம்.

## கும்பழாவளை உற்சவம்

(பண்டத்தரிப்பு)

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார்கோயில் வருடாந்த மஹோற்சவம் இம்மாதம் 27ம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து பத்து நாட்கள் திருவிழா நடைபெற்று அடுத்தமாதம் 5ம் திகதி இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தஉற்சவமும் நடைபெறவுள்ளது. (இ)

## ''அரசு வழங்கிய சம்பள உயர்வு கூட்டுறவு ஊழியருக்கும் 'வழங்குக''

(பண்டத்தரிப்பு)

''அரசாங்கத்தால் தற்போது வழங்கப்பட்டுள்ள சம்பள உயர்வுகளை, ஏனைய அரசாங்க, கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருப்பது போலக் கூட்டுறவுத் துறை ஊழியர்களுக்கும் தாமதமின்றி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்'' என்று கூட்டுறவுத்துறை அமைச்சரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத்தின் பண்டத்தரிப்புப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. சங்கத் தலைவர் திரு. மு.வேலாயுதபிள்ளை தலைமையில் நிறைவேற்றப்பட்ட இதர தீர்மானங்கள் வருமாறு:

''கடந்த ஆறு மாத காலமாக வேலைநிறுத்தப்போராட்டத்தில் ஈடுபட்டுவரும் பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத் தொழிற்சாலை ஊழியர்களின் நிலைமை மிகவும் மோசமான கட்டத்தை அடைந்துள்ளதால் அதைச் சுமுகமான முறையில் தீர்த்துவைப்பதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும்.

''கூட்டுறவுப் பணியாளருக்கென்று கூட்டுறவுத்துறை அமைச்சு புதிதாக வெளியிட்ட சம்பளத் திட்டத்தை எமது பிரதேசக் கூட்டுறவு ஊழியர்களுக்கும் கிடைக்க வகை செய்யவேண்டும்

''குறைந்த சம்பளம் பெறும் கூட்டுறவுத்துறைப் பணியாளர்களுக்கு உணவு முத்திரைகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.''

புதுவருட நிர்வாகிகள் தெரிவு நடைபெற்றபோது தலைவராக திரு. மு. வேலாயுதபிள்ளையும், உப தலைவராக திரு. கா. திருநாவுக்கரசும், செயலாளராக திரு. அ. ம. யோ. புவனேஸ்வரனும், பொருளாளராக திரு. ம.லியோ ஜொய்ஸும் தெரிவு செய்யப்பட்டனர். 12 பேர் அடங்கிய செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது. (அ)

## பரீட்சை ஒத்திவைப்பு பரீட்சார்த்திகள் அவதி!

[கோண்டாவில்]

தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கான தொழிற்கற்கைகளிலான தேசிய தராதரப் பத்திரப் பரீட்சை ஒரு வருடகால தாமதத்தின்பின் நேற்றுநடைபெறுவதாக அறிவிக்கப்பட்டு மாணவர்களுக்கு நேரசூசிகையும் அனுமதி அட்டைகளும் வழங்கப்பட்டிருந்தபோதிலும் யாழ். தொழில்நுட்பக்கல்லூரிக்கு பரீட்சை எழுதவந்த மாணவ மாணவிகள் ஏமாற்றத்துடன் திரும்பிச்சென்றனர்கள்.

பரீட்சை ஒரு வாரம் பிற்போடப்பட்டுள்ளது என்று உயர் கல்வி அமைச்சினால் தொழில்நுட்பக் கல்லூரிக்கு அறிவிக்கப்பட்டபோதிலும் இதுபற்றி மாணவர்களுக்கு நிர்வாகம் அறிவிக்கத் தவறியமையினாலேயே மாணவர் இந்நிலைக்கு உள்ளாகினர்.

நேற்று நடைபெற இருந்த பரீட்சை மீண்டும் அடுத்த வாரம் நடைபெறவுள்ளது. (இ)

## திருட்டுக்கள்

(மன்னார்)

பேசாலையில் கடந்த சில தினங்களாக இரவுநேரத்தில் பழைய உடைகளையும் துணிகளையும் திருடும் சம்பவங்கள் அடிக்கடி இடம்பெற்றுவருகிறது.

## வருடாந்த மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

அராலி முத்துமாரியம்மன் கோவில் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இம்மாதம் 22ம்திகதி சனிக்கிழமை பொங்கல்விழாவுடன் முடிவடையும்.

## ஜீவனும்ச வழக்கு மாதம் ரூ. 250 செலுத்த உத்தரவு

(மட்டுவில்)

''வழக்கு விசாரணை முடியும்வரை நீர் உமது மனைவிக்கும், பிள்ளைகளுக்கும் ஒரு குறிப்பிட்ட தொகை ஜீவனும்சப்பணம் கட்டவேண்டும்.

வழக்கு விசாரணை முடிந்தபின் எவ்வளவு ஜீவனும்சத் தொகை கட்டவேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறதோ அதே தொகையைத் தொடர்ந்து செலுத்தவேண்டும். இப்பொழுது நீர் மாதம் 250 ரூபா செலுத்த வேண்டும்''.

இவ்வாறு ஜீவனும்ச வழக்கொன்றில் பிரதிவாதியைப் பார்த்து சாவகச்சேரிமாவட்ட நீதிபதி ஜனாப் எம். காரியப்பர் கூறினார்.

தனங்கிளப்பைச் சேர்ந்த தணிகாசலம் என்பவர் மீது அவருடைய மனைவி ஜீவனும்சம் கோரி வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்தார்.

இந்த வழக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். எச். காரியப்பர் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின்போது, வாதியின் சட்டத்தரணி நீதிபதியைப் பார்த்து ஐயா இந்த வழக்கில் பிரதிவாதி நிறைய சம்பாதிக்கிறார். அவர் நல்ல சந்தோஷமாக வாழ்கிறார்.

பாவம் அவர் மனைவி ஒரு ஏழைப் பெண். புவனேந்திரன் கமலாம்பிகை என இரு பிள்ளைகளும் உண்டு கஷ்டப்படுகிறார்.

நீதிபதி மாதம் 250 ரூபா ஜீவனும்சம் கொடுக்கும்படி உத்தரவிட்டு மேல் விசாரணையை அடுத்த மாதம் 28ம் திகதிவரை ஒத்திவைத்தார்.

## இக்கட்டிடம் இன்னும் திறக்கப்படவில்லை

(பண்டத்தரிப்பு)

12 லட்சம் ரூபா செலவில் நிறுவப்பட்ட பண்டத்தரிப்பு நவீன சந்தைக் கட்டிடவேலைகள் யாவும் பூர்த்தியடைந்து இரு மாத காலமாகியும் இதுவரை திறந்துவைக்கப்படவில்லை.

கட்டிட ஒப்பந்தக்காரர் இக்கட்டிடத்தைப் பூர்த்தி செய்து யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை பண்டத்தரிப்பு உப அலுவலகத்திடம் ஒப்படைத்துள்ளதாகவும் ஆனால் இதுவரை கட்டிடத்தைத் திறந்துவைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

புதிய கட்டிடம் திறக்கப்பட்டவுடன், பிரதான வாசலில் ஏற்பட்டுள்ள இடநெருக்கடியும் பிரதான வீதிப் பகுதியை மரக்கறி விற்பனையாளர்கள் ஆக்கிரமித்துள்ள நிலையும் நீங்கிவிடுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.


25 — 26-5-82 வரை
றீகல் [யாழ்நகர்]
தினசரி 4 காட்சிகள்
Parithaya
பரித்தய
[ஹிந்தி]

கடைசி வாரம்
ஹரன் யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த், மாதவி
தேங்காய் சீனிவாசன்
தில்லுமுல்லு

## வெற்றுச்சாக்கு கேள்விப்பத்திர விளம்பரம்

வலி கிழக்கு வடபகுதி பல நோக்கக் கூட்டுறவுச் சங்கத்தில் (அச்சுவேலி) தரம் பிரிக்கப்பட்ட (3920) மூவாயிரத்து தொழாயிரத்து இருபது வெற்றுச் சாக்குகள் விற்பனைக்கு உண்டு. விண்ணப்பிக்கவிரும்புவோர் கேள்வி வைப்புப் பணமாக நூறும், மீளத்தகாத பணமாக 5 ரூபாவும் மேற்படி காரியாலயத்தில் 27-5-82ந் திகதிக்கு மூன் கட்டி விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பப் படிவங்களை 28-5-82ந் திகதி மு. ப. 12-30 மணிக்குப் பிந்தாமல் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

விண்ணப்பிக்கும்போது என் வலப்பில் இடதுபக்க மூலையில் 'வெற்றுச்சாக்கு கேள்வி விண்ணப்பம்' என்று குறிப்பிடல் வேண்டும்.

குறிப்பு:-

வெற்றுத் தகரமும் ஏலத்தில் 28-5-82 மு. ப. 12 மணிக்கு மூன் விற்பனை செய்யப்படும்.

பொதுமுகாமையாளர்

வலி கிழக்கு வடபகுதி
பலநோக்கக் கூட்டுறவுச்சங்கம்
அச்சுவேலி.

3314

## சுருட்டுத் தொழிலாளர்கள் சம்பள நிர்ணய சபையின் பிரத்தியேகக் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

இலங்கை சுருட்டுத் தொழிலாளர்கள் சம்பள நிர்ணய சபையின் பிரத்தியேகக் கூட்டம் நேற்றுப் பிற்பகல் யாழ். மாவட்ட தொழில் அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்துக்கு மாவட்டத்தொழில் ஆணையாளர் திரு. ஜி. வீரக்கோன் தலைமை வகித்தார்.

இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் திரு. சி. பொ. மா. க. முதலியார், திரு. க. தங்கராசா திரு. செ. தப்பிராசா ஆகியோரால் பின்வரும் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டன.

''வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளதால் சுருட்டுத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் சுருட்டுக்குக் கூலியாக சகல படிகளுடன் நூறு ரூபா வழங்கப்பட வேண்டும். ஆயிரம் சுருட்டு சுற்றுவதற்கு சாதாரண தொழிலாளிக்கு மூன்று நாள் எடுக்கும் மாதத்தில் பதினைந்து இருபது நாள் மாத்திரமே வேலையுண்டு. ஆகவே சம்பள உயர்வாக நூறு ரூபா வழங்க வேண்டும் என்ற எமது கோரிக்கை நீதியானதும் நியாயமானதுமாகும்''

(மண். நிருபர்)

## இளம் பெண் மர்மமரணம்

(பண்டத்தரிப்பு)

கட்டுடனை இடிகுண்டு கேணியில் இளம் பெண்ணின் சடலம் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

யாழ். பொலிசாரால் இச்சடலம் பொறுப்பேற்கப்பட்டு யாழ். அரசினர் ஆஸ்பத்திரிப் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (மா)

## 35,000 ரூபா நஷ்டஈடு

(சாவகச்சேரி)

லொறியினுல் மோதுண்டு கால் ஒன்றை இழந்த ஒருவருக்கு காப்புறுதி கூட்டுத்தாபனம் 35 ஆயிரம் ரூபா நஷ்ட ஈடுவழங்க இணக்கம் தெரிவித்துள்ளது.

சரசாலையைச் சேர்ந்த சுப்பிரமணியம் பொன்னுச்சாமி என்பவருக்கே இந்த நஷ்ட ஈட்டுத் தொகையை வழங்க கூட்டுத்தாபனம் முன்வந்துள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அப்துல்காதர் என்பவரது லொறி 1978-ம் ஆண்டு ஆகஸ்ட் 28ம் திகதி முகமாலையில் வைத்து பொன்னுச்சாமியை மோதியதாகக் குற்றம் சாட்டி சாவகச்சேரிப் பொலிசாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது சாவகச்சேரி மாவட்ட நீதிபதி எம். எச். காரியப்பர் முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக் கெடுத்துக் கொள்ளப்பட்ட பொது இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் 35,000 ரூபாவை வழங்க இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

## கோவிலில்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற சமயம் கோவிலின்முன் பக்கப்பந்தலில் இணைக்கப்பட்டிருந்த ஒலிபெருக்கியின் 2000 ரூபாவுக்குமேல் பெறுமதியுடைய இரண்டு யூனிற்றுக்களை இனந்தெரியாத திருட்டுப்பேர்வழிகள் கூரையில்ஏறி திருடிச் சென்றிருந்தனர்.

இது தொடர்பாக விசாரணை செய்த காங்கேசன்துறைப் பொலிசார் சந்தேகத்தின் பேரில் மாதகலைச் சேர்ந்த கதிர்காமு சந்திரன், ஆண்டி கணேசலிங்கம் ஆகியோரைக் கைதுசெய்து விசாரணைசெய்த சமயம் அவர்கள் மேற்படி யூனிற்றுக்களை திருடி, எஸ். நல்லநாதன் என்பவரது கடையில் விற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து மேற்படி யூனிற்றுகளை சம்பந்தப்பட்ட கடையிலிருந்து மீட்ட பொலிசார் இந்நபர்கள் குறித்து மேலும் விசாரணை நடத்திய சமயம் மாதகல் பகுதியில் அண்மைக்காலமாக இடம் பெற்ற சைக்கிள் திருட்டுக்கள், வீடுடைத்துத் திருடுதல் போன்ற சம்பவங்களுடன் இவர்களுக்கு தொடர்பிருப்பதாகத் தெரியவந்துள்ளது.

இதுகுறித்து மேலும் விசாரணையிலீடுபட்டுள்ள காங்கேசன் துறைப்பொலிசார் இவர்களிருவரையும் மல்லாகம்நீதிமன்றத்தில் ஆஜர் செய்த சமயம் இம் மாதம் 31ம்திகதிவரை றிமாண்டில் வைக்குமாறு நீதிபதி திரு. சீ. வீ. விக்னேஸ்வரன் உத்தரவிட்டார். (அ)

## மரண அறிவித்தல்

### திருமதி முருகேசு பரமவல்லி

கோப்பாய் வடக்கு முருகேசு பரமவல்லி காலமானர். இவர் வேலுப்பிள்ளை முருகேசுவின் அன்பு மனைவியும்; கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி ஆசிரியர் சற்குணலிங்கம், சாவகச்சேரி மின்சாரசபை மின் அத்தியட்சகர் அமுதலிங்கம், சண்முகலிங்கம், பஞ்சலிங்கம், யாழ். அரசினர் வைத்தியசாலை விநாயகலிங்கம், நகுலேஸ்வரி, இராசேஸ்வரி, கிளிநொச்சி வட்டக்கச்சி இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆசிரியை மங்களேஸ்வரி ஆகியோரின் தாயார் ஆவார். அன்னரது இறுதிச் சடங்குகள் 1982 மே மாதம் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (இன்று) நண்பகல் நடைபெறும். 3315


அகில உலகிலும் முதன் முதலாகக் கண்டுபிடிக்கப்பட்ட 'பிக்' செய்யமுடியாத
பூரண பாதுகாப்பளிக்கும் பூட்டான



பாலன் லீவர் பூட்டு பொருத்தப்பட்ட

# பாலன்

# இரும்புப் பெட்டகங்கள்

விற்பனை விநியோக ஆரம்ப விழா

யாழ். நகரின் மிகப்பெரும் வியாபார ஸ்தாபனமும்
'பாலன்' தயாரிப்புகளின் விற்பனையாளருமான

PAALAN
IRON SAFE

எஸ். சின்னத்துரை அன் பிரதர்

காட்சி அறையில்

நாளை(26-5-82)புதன்கிழமை மாலை 3 மணிக்கு

யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா அவர்கள்
முன்னிலையில் நடைபெறவுள்ளது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்ரேம்.

அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவரையும் இவ்விழாவில் கலந்துகொண்டு
சிறப்பிக்கும்படி அன்புடன் அழைக்கின்ரேம்.

தயாரிப்பாளர்கள்:

PAALAN

A. C. பாலன்
பூட்டு, பெட்டக பொறியியலாளர்களும்
தயாரிப்பாளர்களும்.
550, கே. கே. எஸ். ரேட்,
யாழ்ப்பாணம்.

விற்பனையாளர்கள்:

எஸ். சின்னத்துரை அன் பிரதர்
39. கே. கே. எஸ். ரேட்,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 283 - 284
தந்தி: 'கல்கி'


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1982 ஆம் மே மீ 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81. Eelanadu P. O. Box 49. Telegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.